DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1491
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 1, 2024

# Meet and Greet with MPP Aris Babikian and Special Guest, Premier Doug Ford

# ஒன்றாரியோ முதல்வர் Doug Ford மற்றும் ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் Aris Babikian சந்தித்து வாழ்த்துக்கள் பரிமாறும் நிகழ்வு




ஒன்றாரியோ முதல்வர் **Doug Ford** அவர்கள் மற்றும் ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் **Aris Babikian** அவர்கள் ஆகியோர் சந்தித்து உரையாடி ஸ்காபுறோ தொகுதி மக்களையும் ஆதரவாளர்களோடு உரையாடி வாழ்த்துக்கள் பரிமாறும் நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 4ம் திகதி ஸ்காபுறோ நகரில் நடைபெறுகின்றது. இந்த நிகழ்விற்கு பல தமிழ் பேசும் ஆதரவாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய ‘வாழ்நாள் சாதனையாளர்கள் விருதுவிழா 2024’ சிறப்பாக நடந்தேறியது

*இவ்வருடத்தின் “வாழ்நாள் சாதனையாளர் விருது“ வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற அறுவரின் பெயர்கள் பின்வருமாறு:- பண்டிதர் திரு. ச.வே பஞ்சாட்சரம், கலாநிதி திருமதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர், தேசபாரதி திரு. வே. இராசலிங்கம், எழுத்தாளர் திரு. முருகேசு பாக்கியநாதன், கவிஞர், எழுத்தாளர் மற்றும் பத்திரிகை ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம், கலைஞர் திரு. வயிரமுத்து திவ்வியராஜன் ஆகியோர்.*

-குரு அரவிந்தன்-

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் “விருது விழா -2024“ ஸ்காபரோ சிவிக்சென்றர் மண்டபத்தில் 26-10-2024 அன்று இணையத்தின் தலைவர் திரு. கனகசபை ரவீந்திரநாதன் தலைமை-யில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 31 ஆண்டுகளாக இந்தக் கனடிய மண்ணில் சிறப்பாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர்களாக திரு. தெ.சண்முகராசா, திரு. திருமாவளவன், திரு. வி. கந்தவனம், திரு. சின்னையா சிவநேசன், திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு.சிவபாலு தங்கராசா, திரு. சி. சிவநாயகமூர்த்தி,



பேராசிரியர் திரு.இ. பாலசுந்தரம், திரு. குரு அரவிந்தன், திரு. அகணி சுரேஸ், திரு. க. ரவீந்திரநாதன் ஆகியோர் இதுவரை பணியாற்றியிருந்தனர்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

**இவ்வாண்டின் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!**

எமது அபிமானத்திற்குரிய உதயன் வாசகர்கள்.
விளம்பரதாரர்கள் மற்றும் எழுத்தாளர்கள்
பத்திரிகையாளர்கள் வருடாந்தம் நடைபெறும் உதயன்
கலை மற்றும் விருது விழாக்கள் என அனைத்திற்கு
தங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டும்
அனைவருக்கும் எமது இனிய தீபாவளி
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
-ஆசிரிய பீடம்- கனடா உதயன்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்


HAPPY
Diwali
Hon.
MARY NG, MP
MARKHAM — THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
MaryNgMP.ca


அனைவருக்கும் இனியதீபாவளி வாழ்த்துக்கள்!
HAPPY
DEEPAVALI
தீபாவளித் திருநாளின் ஒளியானது உங்களுக்கு
மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் செல்வத்தையும் வழங்க
வேண்டும்.
RAYMOND CHO
MPP - Scarborough North
4559-B Sheppard Avenue East, Scarborough, ON M1S 1V3
416-297-5040 | raymond.choco@pc.ola.org | raymondcho.ca
Ontario

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# அநுர குமார என்னும் புதியவரையே "குறி" வைக்கும் தமிழ் வேட்பாளர்கள் கூட்டத்தோடு சுமந்திரனும் இணைந்து கொண்டார்?

2024 ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசநாயக்காவை வெற்றி பெறச் செய்வதற்காக இலங்கைத் தீவிற்குள் மாத்திரம் பிரச்சாரம் இடம்பெறவில்லை. ஏனைய வேட்பாளர்கள் எவரும் முயற்சி செய்யாத வகையில் இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே முதற் தடவையாக அநுர குமாரவின் தோழர்களும் அவரது தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய பங்கு வகித்தவர்களும் உலகின் பல நாடுகளுக்கும் சென்று நிதியையும் ஆதரவிற்கான உறுதி மொழிகளையும் பெற்று வந்தார்கள். ஜேவிபியின் அதி உயர் அதிகார பீடமான மத்திய குழு இரவு பகலாக விழித்திருந்து தன் பணிகளைச் சீராகச் செய்து வந்தது. அவர்கள் இன பேதமின்றி தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் பறங்கியர்களையும் பௌத்தவர்களையும் சந்தித்து உரையாடினார்கள். அவர்களிடமிருந்து நிதி அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை.

இவ்வாறான "வெற்றிகரமான" தேர்தல் பிரச்சாரம் இலங்கையின் வாக்காளர்களை மாத்திரமல்ல, ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களும் அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தார்கள். சிலர் மௌனமாக இருந்தார்கள். சிலரோ, "இடதுசாரிகள்" ஆட்சியில் அமரக் கூடாது என்று பிடிவாதமாக இருந்தார்கள். மற்றொரு பக்கத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் உள்ள தமிழ் காங்கிரஸ் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் காரசாரமாக அநுரவிற்கு எதிராக பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள். இதேபோன்று பொ. ஐங்கரநேசன். சிறிதரன் சிவஞானம். செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களும் வேறு பலரும் அநுர குமார ஜனாதிபதியாக வரக்கூடாது என்று தமிழ் மக்கள் மத்தியில் தீவிரமாக பிரச்சாரம் செய்தார்கள்.

அந்த நாட்களில் தான் யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அநுர குமார தமிழ் மக்களிடம் ஒரு உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

நான் அடையப்போகும் வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்று அவர் தான் வெற்றிகொள்ளப் போகும் செய்தியை தமிழ் மக்களிடம் சூசகமாகச் சொல்லிச் சென்றார்.

அந்த நாட்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக சுமந்திரன் அவர்கள் அநுர குமார மாத்திரமே இனவாதத்தை கைகளில் எடுத்துக்கொள்ளாமல் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றார் என்று தெளிவான கருத்து ஒன்றைப் பகிர்ந்து கொண்டார்.

ஆனால் ஜனாதிபதி அநுர குமார அவர்கள் தனது ஆசனத்தில் அமர்ந்த பின்னர் வடக்கில் "குரைத்தவர்கள் மீண்டும் அந்த வேலையைச் செய்யத் தொடங்கினார்கள். வயதில் குறைந்தவராக உள்ள ஒரு இடதுசாரி அரசியல்வாதிக்கு சில மாதங்கள் அவகாசம் வழங்குவோம் அல்லது பொறுத்திருந்து பார்ப்போம் என்றில்லாமல் "கூச்சல்" போடத் தொடங்கினார். இந்த ஆட்சி நிலைக்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்தார்கள். அப்போது தமிழ் மக்கள் உட்பட பலர் நினைத்திருப்பார்கள். இவ்வாறு அநுர குமார என்னும் புதியவர் ஒருவருக்கு எதிராக பேசுகின்றவர்கள் மீண்டும் ரணிலையோ அன்றி மகிந்த ராஜபக்சவையோ அன்றி கோட்டாபாயவையோ ஜனாதிபதியின் ஆசனத்தில் மீண்டும் வந்து அமரச் சொல்கின்றார்களா? என்ற கேள்வியை முன்வைத்திருப்பார்கள்.

ஆனால் இந்த வாரத்தில் முன்னர் வரவேற்றுப் பேசிய சுமந்திரன் அநுர ஆட்சியில் "சறுக்கல்" காணப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார். (இந்த செய்தி எமது யாழ்ப்பாண செய்தியாளர் லோகதயாளனால் எமக்கு அனுப்பி வைக்கப்பெற்று உள் பக்கம் ஒன்றில் பிரசுரமாகியுள்ளது)

சுமந்திரன் அவர்கள் மற்றும் ஏனைய பல வடக்கு கிழக்கு தமிழ் பேசும் வேட்பாளர்களின் குற்றச்சாட்டுக்களில் "நியாயங்கள்" இருக்கலாம். அவ்வாறான நியாயங்களை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அநுர குமார அவர்களின் ஆட்சியின் கீழ் ஒரு புதிய அரசு அமையுமாக இருந்தால் அதை ஆதரிக்காமல் விட்டாலும் தங்கள் எதிர்ப்புத் தன்மையை சற்று குறைத்துக் கொள்ளலாமே என்பதுதான் எமது இவ்வாரக் கதிரோட்டத்தின் மூலம் முன்வைக்கும் கேள்வியாகும்.






இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்துவருகின்றன என்கிறார் தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர்

புு. கஜிந்தன்

எங்களுக்கு எதிராக தமிழ் மக்களிடம் கூறுவதற்கு எந்த விடயமும் கிடையாது. இதனால் சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்துவருகின்றன.

வெளிநாட்டு நீதிமன்றங்கள் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் 27-10-2024 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தேசிய மக்கள் சக்தி சிங்களக் கட்சி என்ற ஒரு குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. நாங்கள் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் எமது கட்சி வேட்பாளர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இதேபோல் எங்கள் மேல் மற்றும் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியானது சர்வதேச விசாரணைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

எங்கள் மேல் விமர்சனங்களை முன்வைப்பவர்களிடம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். அமைச்சரவைத் தீர்மானங்களை முழுமையாக வாசித்துவிட்டு எங்கள் மீது விமர்சனங்களை முன்வையுங்கள்.

எங்களுக்கு எதிராக தமிழ் மக்களிடம் கூறுவதற்கு எந்த விடயமும் கிடையாது. இதனால் சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்துவருகின்றன.



எங்கள் மீது இனவாத சாயத்தைப் பூசுகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கியுள்ளார்கள்.

வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எங்களுடைய நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்கள் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்துவிட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன.

உதாரணமாக பலஸ்தீன பிரச்சினையைக் குறிப்பிடலாம். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கியுள்ளபோதும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இப்படியான நிலைமை காணப்படுகையில் சர்வதேச நீதிமன்றத்திடம் சென்று நீதியைப் பெறுவது என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்கு ஒப்பானது.

மேலும், புலம்பெயர் தமிழர்களிடமும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். ஒரு சில அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தாங்கள் புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் எனக் கூறி அரசியல் சித்து விளையாட்டுக்களை மேற்கொள்கின்றார்கள்.

குறித்த கட்சிகளுக்கு எவ்வாறு நிதி சேகரிப்பு நடைபெறுகின்றன என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். வெளிநாடுகளில் இருந்து பணத்தைக் கொண்டு வந்து 70 வருடங்களுக்கு மேலான போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்ற கீழ்த்தரமான அரசியலை சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் செய்கின்றன. இவை அருவருக்கத்தக்க செயற்பாடுகளாகும். எனவே, புலம்பெயர் தமிழர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றோம் எங்களுடைய பெயரைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம்.” என்றார்.




# பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் — மாற்றத்தை கொண்டுவர ஈ.பி.டி.பியுடன் அணிதிரளுங்கள்

## கிளிநொச்சி பெண் வேட்பாளர் சுந்தராம்பாள் அழைப்பு!

பெண்களால் சாதரிக்க முடியாததென்று எதுவும் கிடையாது. அவர்களது ஆற்றலால் எதனையும் சாதிக்க மட்டுமல்லாது மாற்றியமைக்கவும் முடியும் என்று கூறுவார்கள். இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒவ்வொரு பெண்களும் தமது எதிர்கால வாழ்வியலை சிறப்பானதாக அமைத்துக்கொள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் பலத்தை அதிகரிப்பதற்கு அணிதிரள வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சி தொகுதி வேட்பாளர் திருமதி. சுந்தராம்பாள் சுரேஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 30.10.2024 அன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

யுதத்தத்தல் கிளிநொச்சி மாவட்ட மக்கள் குறிப்பாக பெண்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துயரங்கள் ஏராளம். இந்த துயரங்களை சுமந்து வாழ்ந்தவந்த மக்களுக்கு ஆபத்பாண்டவராக வந்து அபயக்கரம் நீட்டியவர் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

கடந்த கால நாடாளுமன்ற தேர்தல்களில் தமிழர் அரசியல் புலத்தில் இருக்கின்ற கட்சிகள் தேசியம் பேசி எமது மக்களின் உணர்வுகளை தூண்டி வாக்குகளை அபகரித்து அதிக ஆசனங்களை பெற்று தமது சுகபோகங்களை அனுபவித்தது மட்டுமல்லாது எம்மை நடுவீதிகளில் தவிக்கவிட்டு அந்த அவலத்திலும் அரசியல் செய்து வந்தனர்.

ஆனால் ஈ.பி.டி.பி கட்சி தனக்கு மக்கள் வழங்கிய அரசியல் அதிகாரத்தை கொண்டு எமது மாவட்டத்தின் அநேக தேவைகளை குறிப்பாக கணவரை இழந்த பெண்களுக்கு மற்றும் குடும்பங்களை தலைமையேற்று நடத்தும் குடும்பங்கள் சிறுவர்களுக்கென பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்றுக்கொடுத்து அழிந்து கிடந்த எம் தேசத்தையும் மக்களையும் மீண்டும் எங்களால் புத்தெழுச்சியுடன் வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டி ஒவ்வொருவரையும் தலைநிமிர வைத்தது.

அதற்கு ஈ.பிடி.பி கட்சியும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் கொண்டுள்ள நிலையான கொள்கையும் அவர்கள் கொண்டுள்ள தேசிய நல்லிணக்கமுமே காரணமாக அமைந்திருந்தது.

இதேவேளை தமிழ் மக்களின் இதுவரையான போலி அரசியல் பாரம்பரியத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியமாகும்.

அதனால் தான் உங்கள் ஒவ்வொருவரது குடும்பங்களிலிருந்தும் எமது கட்சியின் கொள்கை மற்றும் வழிநடத்தலை ஏற்று தமிழ் அரசியல் பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொரு பேண்களும் முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.

இதேநேரம் தமிழ் அரசியல் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுள் மக்கள் நலனையும் மக்கள் மீதான அக்கறையையும் அவர்களது அரசியல் அபிலாசைகளையும் ஒருங்கிணைத்து சிறந்த பொறிமுறையுடன் அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக மாற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஆரம்பம்முதல் இன்றுவரை தனது சேவைகளை முன்னெடுத்தவரும் ஒரே கட்சியாகவும் ஈ.பி.டி.பியே இருந்து வருகின்றது.

எமது கட்சி இதுவரையான காலத்தில் முன்னெடுத்த மக்கள் நலத்திட்டங்களை சேவைகளை மனதில் ஒவ்வொரு குடிமகனது செவிகளுக்கும் தமிழ் மக்களின் ஏகோபித்த தெரிவு ஈ.பிடிபியும் அதன் சின்னம் வீணையும் கொண்டுசெல்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்படன் செயற்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது.

அவ்வாறு நீங்கள் ஒவ்வொருவரும் அணிதிரண்டால் நிச்சயம் எமது பெண்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுக்க ஈழ மக்கள் ஜனநாயக கட்சியிலிருந்து நாடாளுமன்றில் உங்களின் குரலாக நான் ஒலிப்பேன் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## IMPORTANT MESSAGE FOR ALL SRI LANKAN PENSIONERS

The Annual General Meeting of the Ontario Sri Lankan Pensioners Association will be held on November 9, 2024 from 9.30 am to 2pm at Council Chambers, Scarborough Civic Centre, 150 Borough Drive, Scarborough ON M1P 4N7.

1) The Meeting will be held at the Council Chambers of the Scarborough Civic Centre at 9.30 am
2) The Consul General of Sri Lanka in Toronto will be the Chief Guest at this Function
3) All Sri Lankan Pensioners whether members or non-members are invited
4) Methods of Withdrawal of Funds from Canada from the Pensions Account will be discussed
5) Refreshments will be served
6) Please inform your friends, contacts and other Sri Lankan Pensioners
7) No individual Invitations will be sent

**Contacts:**

| Name: | Mobile: | Email: |
|---|---|---|
| Mr. Maya Kandiah | (416) 895-8111 | mayakandiah@yahoo.ca |
| Mr. Sundar Rajalingam | (416) 454-6360 | sundar114@gmail.com |
| Mr. N. Sathananthan | (416) 908-1156 | satha41@gmail.com |
| Mr. P. Kaneshalingam | (437) 778-1904 | kanesh1946@gmail.com |

Thank you
C. Navaratnarajah, Hon.Secretary
(647) 347- 5590 nava.chelva4@gmail.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு ஆளுநருக்கு "ஒரு சிறந்த நாளைக்கான பிணைப்புகளை வலுப்படுத்துதல்" என்னும் நூலை வழங்கிய இந்திய துணை தூதுவர்!

**பு. கஜிந்தன்**




கடந்த வாரம் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஈ.ஏ.எம்.டாக்டர் எஸ்.ஜெயசங்கர் அவர்களினால் கையளிக்கப்பட்ட நூல் ஒன்று யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவரால் வடக்கு ஆளுநர் திரு.வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டது.

"ஒரு சிறந்த நாளைக்கான பிணைப்புகளை வலுப்படுத்துதல்" என்னும் ஹிந்தி மொழியில் உருவாக்கப்பட்ட நூல், தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் உள்ள இந்திய துணைத்தூதர அலுவலகத்தில் உதவி துணைத்தூதுவர் சாய் முரளி தலைமையில் நடைபெற்றது.

இவ் தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூலினை பெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், இந்திய துணைத்தூதர் சாய் முரளியிடம் இருந்து நூலினை பெற்றுக்கொண்டார்.

# கோப்பாயில் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு முன்பாக பெற்றோர் போராட்டம்!



28-10-2024 அன்றையதினம் கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு முன்பாக பெற்றோர் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். இதன்போது வீதி மறியலிலும் ஈடுபட்டனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்களின் அசண்டையீன செயற்பாடு, பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் தொலைபேசியில் இருத்தல், என பல குறைபாடுகளை முன்வைத்து பெற்றோர் போராடினர்.

வீதியை மறித்து போராடியதால் சிறிதுநேரம் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது. இருப்பினும் பொலிஸார் நிலைமையை சரிசெய்தனர்.



# தலைவர் பிரபாகரனின் கூட்டமைப்பையே சிதைத்தவர்களால் தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திக்க இயலுமா?

### ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கேள்வி



தலைவரின் கூட்டமைப்பையே சிதைத்தவர்களால் தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திக்க இயலுமா? என ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற தேர்தலுக்கான மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டுள்ள அவர், இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எம் மக்கள் அரசியல் ரீதியாகவும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் நிற்க வேண்டும் என்றால் தமிழர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையே பலம் என அவர் அன்றே கணித்து தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதில் அதிக கவனம் செலுத்தினார்.

ஆனால் இன்று எம் தமிழ் தலைமைகள் எமக்காக உயிர் தியாகம் செய்தவர்களை மறந்து தமது சுயலாபத்திற்காக ஆளுக்கோர் பக்கம் நீயா? நானா? எனப் பிரிந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களுக்காக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் என அனைவரும் நம்பி இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிளவடைய இடமின்றி உள்ள போதிலும் மேலும் பிளவடைவதற்கான வாய்ப்புக்கள் கண்ணூடாக தெரிகின்றன.

வீடாக இருந்த அந்த ஒற்றைச் சின்னம் இன்று சைக்கிள், மான், மாம்பழம், சங்கு என பிளவடைந்து மக்களுடைய எதிர்பார்ப்பிலும் மண் அள்ளிப் போட்டுள்ளது.

மக்களுக்காக ஒன்றுபட இயலாதவர்கள் எப்படி மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பார்கள்? என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# டக்ளஸ் தேவானந்தாவின் கொள்கைகளின் பின்னால் மக்கள் அணிதிரண்டால் அனைத்தும் சாத்தியமாகும்

## ஈ.பி.டி.பியின் வேட்பாரளர் மனோகரன்!




சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்பவர்களையும் சுயநலன்களுக்காக செயற்படுகின்றவர்களையும் மக்களுக்காக உழைப்பவர்களையும் மக்கள் இனங்கண்டுள்ள்ளனர். அதனால் நடைபெறவுள்ள தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாக இருக்கின்றது என ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர் கிருஸ்ணபிள்ளை மனோகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் (28.10.2024) அன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் பிரதேசங்களை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப வேண்டும் என்பது அவசியம். குறிப்பாக யாழ் மாவட்டத்தை இலங்கையின் அடுத்த பிரதான அந்நியச் செலாவணியை ஈட்டும் வர்த்தக பிராந்தியமாக கட்டமைக்க வேண்டும்.

கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கொள்கைகளின் பின்னால் மக்கள் இம்முறை அணிதிரண்டு அவருக்கு அதிகப்படியான அரசியல் பலத்தை வழங்கினால் அது சாத்தியமாக்கப்படும் என நம்புகின்றேன்.

இதேநேரம் கடந்தகாலங்களில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தியதாகவே செயற்படுத்தியிருந்தார்.

ஆனால் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் இல்லாமல் செய்யும் போக்கிலேயே சக தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. இதனால் தான் எமது மக்களின் தேவைகளும் பிரதேசத்டதின் அபிவிருத்தியும் மட்டுமல்லாது அரசியல் தீர்வகளும் கைநழுவிப் போயிருந்தன.

இதேநேரம் எமது அரசியல் செயற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கும் பொறிமுறைகளையும் நாம் வெளிப்படையாகவே கூறுகின்றோம். இதை மக்கள் ஏற்று இம்முறை அணிதிரண்டு எமது சின்னமான வீணைக்கு வாக்களித்து எம்மை அரசியல் பலம் மிக்கவர்களாக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது மத்தியில் ஏற்பட்டதைப் போன்று தமிழ் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை கொண்டுவர தமிழ் மக்கள் முயற்சிக்கின்றனர்.

அந்த மாற்றம் ஈ.பி.டி.பியை நோக்கியதாக இருக்கின்றது. அந்த மாற்றத்தினூடாக எதிர்கரும் கார்த்திகை 14 ஆம் திகதியன்று தமிழ் மக்கள் அணி திரண்டு வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து எம்மை அரசியல் ரீதியில் பலம் மிக்கவர்களாக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

குறிப்பாக சந்தர்ப்பவாதிகளையும் மக்கள் சேவகர்களையும் மக்கள் இனங்காணும் தேர்தல் இது எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிப்பார்கள் என்றும் அந்த மாற்றம் ஈ.பி.டி.பிக்கு கிடைக்கும் பட்சத்தில் மக்கள் எதிர்பார்க்கின்ற தேவைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.



# 28ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சோசலிச சமத்துவ கட்சியின் தேர்தல் பரப்புரை கூட்டம்



28ம் திகதி திங்கட்கிழமையன்று மாலை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் குறித்த பரப்புரை கூட்டம் இடம்பெற்றது.

சோசலிச சமத்துவக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் பரமு திருஞானசம்பந்தர், சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியற்குழு உறுப்பினரும், கொழும்பு மாவட்ட வேட்பாளருமான பாணி விஜேசிறிவர்தன உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரமு திருஞானசம்பந்தர் + சோசலிச சமத்துவக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்.

பாணி விஜேசிறிவர்தன : சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியற்குழு உறுப்பினரும், கொழும்பு மாவட்ட வேட்பாளரும். ஆகியோர் வாக்காளர்கள் மத்தியில் உரையாற்றும் போது எடுக்கப்பட்ட படங்கள் இங்கு காணப்படுகின்றன.



# எம் மக்கள் தொகையை பெருமளவு குறைத்தது தான் தமிழ்த்தேசிய வாதிகள் செய்த சாதனை என்கிறார் வேட்பாளர் அங்கஜன்

தமிழர்கள் இல்லாமல் தமிழ்த் தேசியம் சாத்தியமாகாது. அவ்வாறு இருக்கையில் தமிழர் தாயகத்தில் தமிழர்களை இல்லாமல் செய்து விட்டு பிரான்ஸிலும் - கனடாவிலுமா தமிழ்த்தேசியத்தைப் பேசப்போகின்றனர்? என அங்கஜன் இராமநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

28-10-2024 அன்று தென்மராட்சி - நாவற்குழிப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அழிவுப்பாதையை நோக்கி தமிழ் மக்கள் இட்டுச் செல்லப்படுகின்றனர். இதனை எம் மக்கள் உணர வேண்டும். எம் மக்களை இவ்வளவு காலமாக வழிநடத்திய தமிழ்த்தேசிய வாதிகள் சாதித்தது என்ன?. எம் மக்கள் தொகையை பெருமளவு குறைத்தது தான் அவர்கள் செய்த ஒரே சாதனை.

70 வருடங்களாக போராடி உயிர்களை - உடைமைகளை - பல தலைமுறைகளின் எதிர்காலத்தை இழந்தது எமது சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதற்காகத் தானா?

தமிழர் இன்றி தமிழ்த் தேசியம் சாத்தியப்படாது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 9ஆக இருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தற்போது 6ஆக குறைவடைந்துள்ளது. இந்த ஆறு மூன்றாக குறைவடைய வெகு காலம் தேவைப்படாது. ஏன் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்? தாமே ஏகப்பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு இத்தனை காலமாக வென்ற தமிழ்த்தேசியவாதிகள் மக்களை வாழ வைப்பதற்காக எதையாவது செய்தார்களா? மக்களின் அடிப்படை தேவைகள், பொருளாதார விருத்திக்காக என்ன திட்டங்களை செய்தார்கள்?

எனவே மக்கள் இந்தத் தேர்தலில் தேடலுடனும் - தெளிவுடனும் வாக்களிக்காவிட்டால் அடுத்த ஐந்து வருடங்களில் மேலும் பல இழப்புக்களைச் சந்திக்க நேரிடும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

# ஜேவிபியினர் உண்மையான விடயங்களை பகிரங்கமாக சொல்கின்றார்கள்

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் கஜதீபன் தெரிவிப்பு



ஜேவிபியினர் மிகவும் நல்லவர்கள். ஏனென்றால் உண்மையான விடயங்களை அவர்கள் பகிரங்கமாக சொல்கின்றார்கள் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

28-10-2024 அன்று மூளாய் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜேவிபியினுடைய பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சில நாட்களுக்கு முன்னர் பகிரங்கமாக, இந்த நாட்டில் அதிகார பகிர்விக்கு இடமில்லை என சொன்னார்.

ஜேவிபியை பொறுத்தருவரையில் அதன் பொதுச்செயலாளர் தேர்தல் களத்தில் போட்டியிடமாட்டார். அவர் அமைச்சுப் பதவியை எடுத்துக் கொள்ள மாட்டார். ஆனால் அந்தக் கட்சியினுடைய குரலாக அந்த கட்சியினுடைய கொள்கை விளக்கங்களை, அந்த கட்சி எப்படியான முடிவுகளை அடுக்கம் எனபதை சொல்லுகின்ற நபர் என்றால் அந்த கட்சியின் பொதுச்செயலாளர் தான்.

பதிமூன்றாவது சீர்திருத்தம் குறித்து நாங்கள் பரிசீலிக்கின்றோம். அது இந்த நாட்டுக்கு தேவையற்ற ஒன்று எனக்கூறினார். பதின்மூன்றாவது சீர்திருத்தத்தை நாங்கள் ஒரு பொழுதும் தீர்வாக ஏற்றுக் கொண்டது கிடையாது என தெளிவாகச் சொல்கின்றோம். அனைவரையும் விட 13 பற்றி சொல்வதற்கு எனக்கு அதிகம் உரிமையுள்ளது. ஏனென்றால் நான் அந்த மாகாண சபைக்குள் உறுப்பினராக இருந்தவர்.

இத்தனை ஆண்டுகளாக நடைபெற்ற இந்த யுத்தத்திற்கு பிறகு இலங்கை அரசியல் அமைப்பிலே இருக்கக்கூடிய ஒரே ஒரு விடயம் அது எனற காரணத்தினால், சில சில மக்கள் நலன்களை அது சார்ந்து நகர்த்த முடியும் என்ற காரணத்தினால், இருக்கக்கூடிய ஒன்றை நடைமுறைப்படுத்துங்கள் என கேட்கின்றோம்.

ஆனால் அது கூட தேவையில்லை என ரில்வின் சில்வா கூறுகின்றார். அது நடைமுறைச் சாத்தியம் இல்லை என அவர் கூறுகின்றார். ஆனபடியால் மஹிந்த ராஜபக்சவை விட சிங்கள பௌத்தத்தை மிக ஆழமாக நேசிக்கின்றார் அவர் என் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர்கள் சமூகத்திற்கு காலம் காலமாக அரசியல்வாதிகள் செய்து வரும் நம்பிக்கை துரோகம்

## வாக்கினை பெற்று விட்டு காலை வாரிவிட்டார் சஜித் என வேட்பாளர் சாலக்சன் குற்றச்சாட்டு!



ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நாம் சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவு வழங்கினோம். பெரும்பாலான வாக்குகளை நாம் பெற்றுக்கொடுத்தோம். நாடாளுமன்ற தேர்தலின் போது, அவர் எங்களுக்கு ஆசனம் கூட தரவில்லை இதுதான் கடற்றொழிலாளர்கள் சமூகத்திற்கு காலம் காலமாக அரசியல்வாதிகள் செய்து வரும் நம்பிக்கை துரோகம் என மேலும் தெரிவித்தார். வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமே கடற்றொழிலாளர்களின் குடும்பங்களை தேடி வருகின்றனர். வென்ற பின்னர், கடற்றொழிலாளர்கள் குடும்பங்களை மறந்து செல்கின்றனர். அதனாலயே உங்களில் இருந்து உங்கள் தோழனாக நான் போட்டியிடுகிறேன் என ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் தேர்தல் தொகுதியில் 28ம் திகதி அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சரியாக நாங்கள் சிந்தித்து செயற்பட கூடிய காலமும் நேரமும் தற்போது எங்களுக்கு கிடைத்துள்ளது. அனைவரும் சிந்தித்து வாக்களிக்கும் போதே வெற்றி கிட்டும்.

குறிப்பாக கடந்த காலங்களில் கடற்றொழிலாளார்களிடம் ஏனைய வேட்பாளர்கள் வந்து எமது வாக்குகளை பெற்று செல்வார்கள். வாக்கு கேட்க வரும் போது, கையை கொடுத்து கட்டியணைத்து செல்வார்கள். வென்ற பின்னர் அவர்கள் எங்கே சென்றார்கள் என எங்களில் யாருக்கும் தெரியாது.



# கட்டுக்கரை விவசாயிகளின் சவால்கள் தொடர்பில் ஆராய்வு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

(25-10-2024)

வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சம்சோன் ஜெறோம் 25-10-2024 அன்று கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

மன்னார் அடம்பன் கன்னாட்டியில் விவசாயிகளுடன் சந்திப்பில் கட்டுக்கரை குளத்திற்கான நீர் வரத்தினை எதிர்காலத்தில் அதிகரிக்க செய்வதன் ஊடாக வறட்சி காலத்தில் சிறுபோக நெற்செய்கை ஊக்கிவிக்கும் நோக்கில் குளத்தில் இருந்து விவசாயத்திற்கு எவ்வாறு நீர் வழங்கவேண்டும் என்பது தொடர்பில் வேட்பாளரால் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. மன்னாரில் முதன்மையான குளமாக கட்டுக்கரை குளம் காணப்படுகிறது.

இந்த குளத்தை நம்பி பல ஆயிரம் விவசாயிகள் விவசாய செய்கையினை மேற்கொண்டு வருகிறார்கள். குளத்திற்கான நீர் வரத்தினை அதிகரிப்பதன் ஊடாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம் என சுயேட்சைக்குழு வேட்பாளர் சம்சோன் ஜெறோம் எடுத்துரைத்துள்ளதுடன் விவசாயிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளார்.



# மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள 31 ஆயிரத்து 339 ஏக்கர் பெரும் போகத்திற்கான முதலாவது நீர் விநியோகம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பம்

**- எஸ்.ஆர்.லெம்பேட் (28-10-2024)**

மன்னார் மாவட்டத்தில் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான பெரும் போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் வினியோகமானது 28ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் போகத்திற்கு 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட உள்ள நிலையில் முதலாவது நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாணத்தில் 2வது பெரிய குளமான முருகன் கட்டுக்கரை குளம் பெரிய உடைப்பு துருசு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வ மத தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நீர்ப்பாசன பணிப்பாளர், முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர், அரசாங்க திணைக்கள அதிகாரிகள் வாய்க்கால் அமைப்பு பிரதிநிதிகள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது கட்டுக்கரை குளத்தில் 8.3 அடி நீர் காணப்படுகிறது.மேலும் கட்டுக்கரை குளத்திற்கு நீர்வரத்து காணப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய முதலாவது நீர் வினியோகமானது 28ம் திகதி அன்று இடம் பெற்றுள்ளது.



# பின்தங்கிய கிராமங்களை தர முயர்த்துவதே எனது இலக்கு

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் அ.றொஜன்

**- எஸ்.ஆர்.லெம்பேட்**

பின்தங்கிய கிராமங்களை தரமுயர்த்தி அக்கிராமங்களில் உள்ளவர்களின் விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம் போன்றவற்றை முன்னிலை படுத்துவதே எனது குறிக்கோள் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் அ.றொஜன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிடாரி குளம் கிராமத்தில் 28ம் திகதியன்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இக் கிராமம் போன்ற பின்தங்கிய கிராமங்களை தரமுயர்த்திய அவர்களின் விளையாட்டு, கலை, கலாச்சாரம் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி அவர்களின் தரத்தை உயர்த்துவது எனது முக்கிய குறிக்கோள்.

எனவே எனது பாராளுமன்ற வெற்றியை தொடர்ந்து இவ்வாறான செயல்கள் ஏனைய கிராமங்களிலும் தொடர்ச்சியாக முன் னெடுக்கவுள்ளேன்.

எனவே இம்முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் கட்டாயம் வழங்க வேண்டும்.

மாற்றம் ஒன்றே மாறாதது.மாற்றத்தின் மூலம் நீங்கள் பலனை பெற்றுக்கொள்ள முடியும்.எனவே இம்முறை என்னை பாராளுமன்றம் அனுப்பி வையுங்கள்.

உங்கள் கிராமம் உள்ளடங்களாக பின் தங்கியுள்ள அனைத்து கிராமங்களையும் முன்னேற்ற எனது பணி முன்னெடுக்கப்படும்.எனவே உங்களின் ஆதரவு எனக்கு முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5722 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# ஊசிக்கு விழுமா வாக்கு?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கனடாவில் வசிக்கும் ஒரு செயற்பாட்டாளர் என்னிடம் கேட்டார், “கடந்த வாரக் கட்டுரையில் மருத்துவர் அர்ஜுனாவை ஒரு பலூன் என்று சித்திரித்திருந்தீர்கள். ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவருக்கு அதிகரித்த ஆதரவு உண்டு போலத் தெரிகிறது. இப்போது வடக்கில் காணப்படும் சுயேச்சைகளில் அவருக்குத்தான் அதிக வாக்குகள் கிடைக்கலாம் என்றும் தோன்றுகின்றது” என்று.

மற்றொரு நண்பர், அவரும் புலம்பெயர்ந்தவர் கூறினார், “இது சமூகவலைத்தளங்களின் காலம். யூடியூப்பர்கள் நீங்கள் கூறுவது போல எது சரியானது என்று தேடுவதை விடவும், எதைப் பிரசுரித்தால் தங்களுக்கு வருமானம் அதிகம் கிடைக்கும் என்று தேடுகிறார்கள். இது அர்ஜுனா போன்றவர்களுக்கு சாதகமானது” என்று.

நாடாளுமன்ற தேர்தலில் தாயகத்தில் களமிறங்கியிருக்கும் சுயேச்சைகளில் மிகக் குறுகிய காலத்துக்குள் மிகப் பரவலாகப் பிரபல்யம் அடைந்த ஒருவர் அர்ஜுனாதான். குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அதிலும் நடுத்தர வயதுப் பெண்கள் மத்தியில் அவருக்கு ரசிகைகள் அதிகம் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் நாட்டில் உள்ள தமது உறவினர்களுக்கு தொலைபேசியில் அழைத்து அர்ஜுனாவை ஆதரிக்குமாறு தூண்டி வருகிறார்கள். அந்தளவுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அர்ஜுனாவுக்கு கவர்ச்சி அதிகம்.

அவருடைய மீசையில்லாத முகம், முகபாவம், நேரலையில் அவர் கதைக்கும் விதம். எளிமையாக, இயல்பாகப் பேசும் ஆற்றல், எப்பொழுதும் நேரலையில் நிற்பது. போன்றவை அவருடைய பிரதான கவர்ச்சிகள். ஆனால் அண்மை நாட்களாக வெளிவரும் காணொளிகளை வைத்துப் பார்த்தால் அவர் தன் வாயாலேயே கெடப் போகிறாரா என்ற சந்தேகம் அதிகரிக்கின்றது.

சமூக வலைத்தளங்கள் மற்றும் யூ டியுப்கள் போன்றன நிபுணத்துவ அறிவை வெளியே தள்ளுகின்றன என்ற விமர்சனம் ஏற்கனவே உண்டு. சமூக வலைத்தளங்களின் காலம் எனப்படுவது சாதாரணமானவர்களின் காலம்தான். சமூக ஊடகங்கள் சாதாரணமானவர்களுக்கு மேடை அமைத்துக் கொடுக்கின்றன. இதனால் அவை பொது உளவியலை அதிகம் பிரதிபலிக்கின்றன. ஆனால் பொது உளவியல் எப்பொழுதும் சரியாகத்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. அது புத்திசாலித்தனமாக அல்லது நீதியானதாக இருக்க வேண்டும் என்றும் இல்லை. அது மாயைகளின் பின் போக முடியும். பொது உளவியல் பெரும்பாலும் மந்தை மனோநிலையைக் கொண்டது என்ற ஒரு விமர்சனம் உண்டு. அது அறிவுபூர்வமாக விவகாரங்களை அணுகுவதில்லை என்ற விமர்சனமும் உண்டு. சமூக வலைத்தளங்களும் யூரியூப்களும் பொதுப் புத்தியை வருமான நோக்கு நிலையில் இருந்து அணுகும் பொழுதும் கையாளும் பொழுதும் அங்கே எது பரபரப்பானதோ, சர்ச்சைக்குரியதோ, எது சாதாரண ஜனங்களை சுண்டி இழுக்கின்றதோ அதுதான் செய்தியாகின்றது; காணொளியாகிறது.

குறிப்பாக தமிழில் அறிவுபூர்வமான விஞ்ஞானபூர்வமான விடயங்களை எடுத்து அலசும் யூரியூப்களை விடவும் பரபரப்பான சூடான செய்திகளைப் பரப்பும் யூரியூப்கள்தான் அதிகம் பார்க்கப்படுகின்றன. இது தமிழுக்கு மட்டுமான சாபக்கேடு அல்ல. ஒரு உலகப் பொது யதார்த்தம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனால் சாதாரண மக்களைச் சுண்டியிழுக்கும் விவகாரங்களும் நபர்களும் அதிகம் பிரபல்யமாகின்றார்கள். அர்ஜுனாவும் அப்படித்தான்.

மருத்துவத்துறை மீது அர்ஜுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில் பல ஏற்கனவே சாதாரண மக்கள் மத்தியில் உள்ளவைதான். அர்ஜுனா சாதாரண மக்களின் குரலாக மேலெழுந்தார். அதுதான் அவருக்கு இருந்த கவர்ச்சி. இப்பொழுதும் அந்த கவர்ச்சி உண்டு. அவருடைய முகநூல் பக்கத்தில் அவரை பின்தொடர்புகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக அதிகரித்துள்ளது. அந்த பின் தொடரிகளில் அனைவரும் அவருடைய அரசியல் நிலைப்பாட்டை ஆதரிப்பார்களாக இருந்தால் பெரும்பாலும் அவருக்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைக்க வேண்டும். கிடைக்குமா?

இப்பொழுது அரங்கில் காணப்படும் தமிழ் சுயேச்சைகளில் அதிகம் பிரபல்யமான ஒருவர் அவர்தான். ஏனைய பெரும்பாலான வேட்பாளர்களோடு ஒப்பிடுகையில் ஏற்கனவே பிரபல்யமாக உள்ள அரசியல்வாதிகளுக்கு அடுத்தபடியாக சாதாரண மக்களுக்கு அதிகம் தெரியவந்த ஒருவராக அர்ஜுனா காணப்படுகிறார். இது அவருக்கு வாக்குகளைத் திரட்ட உதவக்கூடும்.

அதாவது பொழிவாகச் சொன்னால் ஒரு வேட்பாளரின் பிரபல்யத்தின் அளவுதான் அவருக்கு விழும் வாக்குகளின் அளவும் என்று எடுத்துக் கொண்டால், அர்ஜுனாவுக்கு அதிகம் வாக்குகள் விழ வாய்ப்புகள் உண்டு. அப்படி விழுமா?

அர்ஜுனா மட்டுமல்ல, ஏனைய எல்லா வேட்பாளர்களுமே டிஜிட்டல் ப்ரோமோஷன் என்று கூறிக் காசைத் தாராளமாக அள்ளி வீசுகிறார்கள். தொடர்ச்சியாக சமூக வலைத்தளங்களில் அவர்களுடைய சிறிய மற்றும் பெரிய விளம்பரங்கள் வெளிவருகின்றன. குறிப்பாக ஒவ்வொருவரும் தங்களுக்கு என்று பாடல்களைத் தயாரிக்கிறார்கள். அல்லது ஏற்கனவே உள்ள பாடல்களின் சில வரிகளைத் தெரிவு செய்கிறார்கள். ஒவ்வொரு வேட்பாளரும் தன்னை ஒரு சினிமாத்தனமான கதாநாயகனாக அல்லது கதாநாயகியாகக் கட்டி எழுப்புவதற்காக பாடல்களின் பின்னணியில் காட்சி தருகிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநகரங்களைக் கொண்ட தென்னிலங்கையிலும் மேற்கத்திய நாடுகளிலும் விளம்பர நிறுவனங்கள் உண்டு. அங்கு விளம்பரம் ஒரு கலையாகவும் வியாபாரமாகவும் திட்டமிட்டு புத்திபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக வடிவமைக்கப்படுகின்றது. அதற்குரிய செலவும் அதிகம். தென்னிலங்கையில் பிரதான வேட்பாளர்கள் தமது சுவரொட்டிகள் தொடக்கம் டிஜிட்டல் விளம்பரங்கள் வரை எல்லாவற்றிற்கும் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட விளம்பர நிறுவனங்களிடம் பொறுப்பை ஒப்படைக்கின்றார்கள். அதற்கு வேண்டிய நிதியும் அவர்களிடம் உண்டு. ஆனால் தமிழர் தாயகப் பகுதியில் அவ்வாறு வளர்ச்சி பெற்ற விளம்பர நிறுவனங்கள் இல்லை. அதைவிட முக்கியமாக, விளம்பரத்தை அல்லது டிஜிட்டல் ப்ரமோசனை ஒரு கலையாகக் கருதி அதை அதற்குரிய கலைப் பெறுமானங்களோடும் வணிகப் பெறுமானங்களோடும் கையாளும் நிறுவனங்கள் கிடையாது.

இத்தகையது ஒரு பின்னணிக்குள், தமிழ் வேட்பாளர்கள் பலருடைய சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், டிஜிட்டல் விளம்பரங்கள் போன்றவற்றில் கலைப் பெறுமதியைக் காண முடியவில்லை. அவற்றில் அரசியல் வாடைதான் அதிகம்.

இப்படிப்பட்டதோர் பிரச்சார, விளம்பரச் சூழலில் அர்ஜுனாவும் உட்பட எல்லா வேட்பாளர்களும் அவரவர் தங்களுடைய நிதிக் கொள்ளளவுக்கு ஏற்ப பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

இதில் அர்ஜுனா ஒரு இடத்தில் தெளிவாக வேறுபடுகிறார். ஏனைய பெரும்பாலான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட வேட்பாளர்கள் தங்களுடைய பிரச்சார விளம்பரங்களில் பெருமளவுக்கு தமிழ்த் தேசிய அரசியலைத்தான் உரையாடுகிறார்கள். ஆனால் அர்ஜுனா மருத்துவத்துறைக்கு எதிராக முன்னெடுத்த கலகத்தின் மூலம் கட்டி எழுப்பிய பிம்பத்தைத்தான் பிரச்சாரப்படுத்தி விளம்பரப்படுத்தி வருகிறார். இந்த வேறுபாடும் அவருக்கு அதிகரித்த வாக்குகளைத் திரட்டிக் கொடுக்குமா?

தமிழ் தேர்தல் வரலாற்றில் அர்ஜுனாவை போன்ற ஒரு சுயேச்சை குழு ஒரு விதத்தில் புதிய அனுபவம் தான். அது தமிழ் தேர்தல் வரலாற்றில் ஒரு வித்தியாசம். ஆனால் தனக்குக கிடைத்த பிரபல்யத்தை அதுவும் குறுகிய காலத்தில் கிடைத்த பிரபல்யத்தை தேர்தலில் முதலீடு செய்ய முற்படும் விடயத்தைப் பொறுத்தவரை, அவர் ஏனைய சராசரி தமிழ் வேட்பாளர்களை போல ஒருவர்தான்.

தனக்கு கிடைத்த பிரபல்யத்தை அதுவும் மிகக் குறுகிய காலத்தில் கிடைத்த பிரபல்யத்தை எப்படி வாக்குகளாக மாற்றலாம் என்று அவர் சிந்திக்கின்றார். அதை நோக்கியே உழைக்கின்றார்.

அந்த பிரபல்யம் அவருக்கு வாக்குகளாக மாறுமா? இல்லையா? என்பதை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அவர் சிறை வைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அவரை மீட்பதற்காக யாரும் தெருவில் இறங்கவில்லை. சாவகச்சேரியில் அவர் தனது கலகத்தைத் தொடங்கிய பொழுது நூற்றுக்கணக்கான மக்கள் அவருக்காக வீதியில் திரண்டார்கள். ஆனால் அதே கலகத்தின் தொடர்ச்சியாக அவர் சிறை வைக்கப்பட்ட பொழுது யாரும் அவருக்காகத் தெருவில் இறங்கவில்லை. அப்படித்தான் வாக்களிப்பின் போதும் அவருடைய அபிமானிகளும் பின்தொடரிகளும் அவரைக் கைவிடுவார்களா அல்லது? வெற்றி பெற வைப்பார்களா? அல்லது அவர் தன்னுடைய வாயாலேயே தோற்றுப் போவாரா?

## மழை

--------------------------------

மழையே மழையே மெதுவாய்ப் பெய்வாய்
மாரிக் காரே மெத்தப் பெய்வாய்
அழையா விருந்தாய் அவனிக்கு வந்தாலும்
ஆசையாய் உனையே ஆதரித்து நிற்போமே!

குளங்கள் நிறைந்து கழனி விளையவும்
குடிநீர்ப் பஞ்சம் குறைந்து போகவும்
வளங்கள் பெருகி வாழ்வு சிறக்கவும்
வருவாய் விரைவாய் வருண பகவானே!

சிலநாள் சொல்லி வீட்டும் வருகிறாய்
சொல்லா வந்து சோதனை செய்கிறாய்
பலமுறை பாடாய்ப் படுத்து கின்றாய்
பயிர்களை நாசம் செய்துமே போகிறாய்

ஆலங்கட்டியாய் அழகு காட்டுகிறாய்
ஆவேசம் கொண்டும் அகிலத்தை அழிக்கிறாய்
காலம் பார்க்காமல் கலங்க அடிக்கிறாய்
காகுளியாய் மாறி காதையும் கிழிப்பாயே!

கார்முகில் கண்டால் கானமயில் ஆடுமாம்
கார்த்திகை வந்தால் கனமழை பொழியுமாம்
நீரிலா வாடிய நிலபுலம் எல்லாமே
நாற்று நிலமாய் மாறியே நின்றதே!

ஊருணி மட்டம் உயர்வு பெற்றதே!
ஊர்மனை எல்லாம் உற்சாகம் கொண்டனர்
பாருக்கு பருவமழை பொய்த்துப் போனால்
பாழாகிப் போகுமே பயன்தரும் யாவுமே!

சித்திரை நீவந்தால் சிறுமாரி என்றே
சிறுபயிர் எல்லாம் சீராய் விதைப்போம்
கத்திரி வெயிலில் கருக்கும் காலம்
கடவுள் போலவே கருனை காட்டுவாய்

காற்றுடன் சேர்ந்து கடுஞ்சேதம் செய்கிறாய்
காலம் அறிந்து கடமையும் புரிகிறாய்
சோற்றுக்கும் நீதான் துணையாய் இருக்கின்றாய்
சாற்றுதல் செய்கிறோம் சிறப்பாய் வாழ்கவே!

காகுளி – – –பேய்ச்சத்தம். நாற்றங்கால் – – – நாற்றுப்போடும் இடம்.
ஊருணி – – –சிறிய நீர்நிலை. கத்திரி – – – அக்கினி நட்சத்திரக் காலம்.

--------------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# கிழக்கு கடற்கரையில் மீன்கள் இறப்பதற்கு கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றமே காரணம் என நாரா நிறுவனம் தெரிவிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**- ந.லோகதயாளன்**

இலங்கையின் கிழக்கு கடற்கரையில் கடற் படுக்கையை அண்டி வாழும் கிளத்தி மீன்கள் பெருமளவில் இறப்பதற்கு பருவகால கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றத்தால் கடல் நீரின் உப்புத்தன்மை குறைவடைந்ததே காரணம் என நாரா நிறுவனப் பணிப்பாளர் க. அருளானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விபரம் தெரிவிக்கையில், தென்மேற் பருவ பெயற்சி காலத்திலிருந்து வடகீழ் பருவ பெயற்சி கால மாற்றத்தின் போது காற்று திசை மாற்றதினால், அதுவரை இலங்கை இந்திய கிழக்கு கரையோரமாக வடக்கு நோக்கிப் பாயும் கிழக்கு இந்திய கரையோர கடல் நீரோட்டம் திசை மாற்றமடைந்து வட வங்காள விரிகுடாவிலிருந்தது தெற்கு நோக்கி இந்திய கிழக்கு கரையோரமாக பாய்ந்து இலங்கையின் கிழக்கு கரையை வந்தடைகிறது, இன் நீரோட்டம் தொடந்து இலங்கையின் தெற்கு முனையில் மேற்கு நோக்கி திரும்பி அரபிக் கடலை சென்றடைகிறது.

இந்த இந்திய கரையோர கடல் நீரோட்டம் பிரமபுத்திரா, கங்கை போன்ற நதிகளின் நன் நீரை கிழக்கு கடற்கரைக்கு கொண்டு வருவதால் கடல் நீரின் உப்புத்தனமை குறைவடைகிறது, உப்புத்தன்மை குறைபாடு கடற்படுக்கையை அண்டி வாழும் கிளத்தி போன்ற மீன்களின் உடற் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் நலிவடைந்த மீன்கள் கடல் நீர் மேற்பரப்பிற்கு வருகின்றன. அலையை எதிர்த்து நீந்த திராணியற்ற இம் மீன்கள் அலையில் சிக்கி கரையில் ஒதுக்கப்படுகின்றன.

இந்த நிகழ்வு ஒவ்வொரு வருடமும் ஜப்பசி மாத காலத்தில் நிகழும் போதும், உப்புத்தனமை குறைபாட்டிற்கான காரணமான நன் நீரின் அளவு பெரு ஆறுகளின் நீரேந்து பகுதியின் மழை வீழ்ச்சியில் தங்கி இருக்கிறது.

இந்த மழை வீழ்ச்சியின் அளவை இந்து சமுத்திரத்தின் கிழக்கு (கிழக்கு ஆபிரிக்க கடல்) மேற்கு (சுமத்திரா) கடல் நீர் வெப்ப வேறுபாடு தீர்மானிக்கிறது, இது இந்திய கடல் இருமுனை என்றழைக்கப்படுகின்றது. 2023 இலிருந்து இந்திய மேற்கு கடல் நீரின் வெப்பம் அதிகரித்து காணப்படுவதால், தற்காலப்பகுதியில் இந்திய கடல் இருமுனை நேர் பெறுமானத்தை அடைந்திருக்கிறது. நேர் பெறுமான காலப்பகுதியில் வங்காள விரிகுடாவினுள் நீரகற்றும் பெரு ஆறுகளின் (இராவட்டி, பிரமபுத்திரா, கங்கா, கிருஷ்ணா, கோதாவரி, மகாவலி) நீரேந்து பகுதியில் அதிக மழை வீழ்ச்சி பெறப்படுகிறது. இதனால் அதிகளவு நன் நீர் இந்திய கரையோர கடல் நீரோட்டம் மூலம் கிழக்கு கரையை வந்தடைந்து கடல் நீரின் உப்புத்தன்மையை அதிகளவு குறைவடய செய்து மீன் இறப்பிற்கு காரணமாக அமைகிறது. கடந்த தாசப்பத்தில் இந்திய கடல் இருமுனை நேர் பெறுமானத்தை 2016 மற்றும் 2019 ஆண்டு காலப்பகுதியில் அடைந்திருந்தது என்றார்.



# தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் கால வாக்குறுதிகளும் சறுக்க தொடங்கி விட்டது என்கின்றார் எம்.ஏ.சுமந்திரன்

**- ந.லோகதயாளன்**

மாற்றம் என கூறி ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் கால வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக சறுக்க தொடங்கி விட்டது. என யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழரசு கட்சி சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 31ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மாற்றத்திற்கான தேர்தல் என சொல்லப்படுகிறது மாற்றத்தின் ஆரம்பம் என ஜனாதிபதி தேர்தலை சொல்கின்றனர். ஒரு வகையில் அது சரி தான். காலம் காலமாக இரண்டு கட்சிகள் தான் மாறி மாறி ஆட்சி செய்த காலத்தில் இருந்து, தற்போது பாரிய மாற்றமாக மூன்றாவது தரப்பு ஆட்சியை பிடித்துள்ளது.

அவர்கள் ஆட்சியை பிடிக்க ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் ஆயுதம் ஏந்தி போராடியவர்கள்.

ஊழல் கேடான அரசியலில் இருந்து மாற்றம் வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதனால் தான் 69 இலட்ச மக்களின் வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக இருந்தவரை நாட்டை விட்டு துரத்தினர். அப்படி செய்தும் மக்கள் எதிபார்த்த மாற்றம் வராததால் இரண்டரை வருடங்கள் காத்திருந்து, தேர்தல் ஊடாக மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

மாற்றம் வேண்டும் என மக்கள் விரும்பினார்கள் அவர்கள் முன் தேசிய மக்கள் சக்தி மட்டுமே இருந்தனர். அதனால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர்.

ஆனால், தமிழ் மக்கள் வாழ்க்கையில் அரசியலில் 75 வருடங்களுக்கு மேலாக நாங்கள் மாற்றத்தை தேடுகிறோம். அதற்காக பல வழிகளில் போராடி, பல உயிர்களை இழந்துள்ளோம்.

எங்களுடைய மக்கள் 75 வருட காலமாக நியாயமான அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். தமிழ் மக்கள் விரும்பிய இந்த அரசியல் மாற்றத்திற்கு தெற்கு மக்கள் பங்கு தாரர்களாக வரவில்லை.

தற்போது மாற்றம் என கூறி ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் கால வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக சறுக்க தொடங்கி விட்டது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவது என்ற கோரிக்கையை ஜே.வி.பி யினரும் இணைந்து முன் வைத்தனர். பயங்கரவாத தடுப்பு சட்டம் முற்றாக நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் தற்போது ஆட்சிக்கு வந்த பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க தேவையில்லை. அதனை துஷ்பிரயோகம் செய்யாது இருந்தால் போதும் என சொல்கின்றனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்றுதான் ஜேவிபி யினரும் பாதிக்கப்பட்டனர். ஆகையினால் அதனை நீக்க வேண்டும் என முதலில் கூறியவர்கள் தற்போது அதனை துஸ்பிரயோகம் செய்யாது இருந்தால் போதும் என்கின்றனர்.

தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக காற்றில் பறக்க விடப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் முடிவின் வரைபடத்தில் கோட்டாபாய ராஜபக்சேவிற்கும் அநுர குமார திசாநாயக்கவிற்கும் கிடைத்த வாக்குகளில் பெரிய வித்தியாசம் இல்லை. என்பது தெளிவாக தெரியும். அதாவது சிங்கவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியை தவிர ஏனைய பகுதியில் அநுராவிற்கு வாக்குகள் கிடைக்கவில்லை.

வடக்கு கிழக்கு மக்கள் 75 வருட காலமாக ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். அதிகாரங்கள் சரியாக பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

சமஸ்டி கட்டமைப்பாக அது மாற வேண்டும். அந்த நிலைப்பாட்டை நாங்கள் முன் கொண்டு செல்ல நாடாளுமன்றுக்கு மிக பெரும் பலத்துடன் செல்ல வேண்டும். என்று தெரிவித்துள்ளார் சுமந்திரன் அவர்கள்.




# பனை அபிவிருத்திச் சபை நியமனம் தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் கேள்வி எழுப்பியுள்ளது

**- ந.லோகதயாளன்**

தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபைக்கு (PDB) மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில், அக்டோபர் 29 அன்று, ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனமானது, இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் (ECSL) முறைப்பாடு செய்துள்ளது.

அக்டோபர் 10 ஆம் திகதி அன்று பனை அபிவிருத்திச் சபையின் (PDB) தலைவர் பதவிக்கு செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை நியமிக்கப்பட்டதோடு, அதைத் தொடர்ந்து 12 நாட்கள் இடைவெளியில் அவர் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக விநாயகமூர்த்தி சகாதேவன், அக்டோபர் 22 அன்று அதே பதவிக்கு நியமிக்கப்பட்டார். மேலும், தேர்தல்கள் ஆணைக்குழு விதித்துள்ள தடைகளுக்கு மத்தியிலும் தலைவர்கள் மாற்றம் மற்றும் பல புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிப்பதற்கு பொறுப்பான அமைச்சர் அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் 25 அன்று இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவால் (ECSL) வெளியிடப்பட்ட வர்த்தமானியில் மற்றும் தேர்தல் சட்டத்தில், குறிப்பாக அரச அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறாமல், தேர்தல் காலத்தில் அரச நிறுவனங்களில் எந்தவொரு ஆட்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள் அல்லது இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முக்கியமான தேர்தல் காலகட்டத்தில் சட்டத்தை மதிக்காத வகையில் அரசாங்கம் நடந்துகொள்வது கேள்விக்குரிய சூழ்நிலையை எழுப்புகிறது.

இவ்வாறான நியமனங்கள் மூலம், பொதுமக்களின் நம்பிக்கை பலவீனப்படுத்துவதுடன் தேர்தல் நடைமுறையின் நேர்மைக்கும், ஜனநாயக செயல்முறையின் நியாயத்தன்மையும் கேள்விக்குட்படுத்தப்படலாம். இது குறித்து இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வுஜளுடு கோருகிறது.

பொது நிறுவனங்கள் மீதான அரசியல் பக்கச்சார்பு அல்லது தேவையற்ற செல்வாக்கின் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக பொதுத் தேர்தல் முடியும் வரை பொது நிறுவனங்களில் இத்தகைய நியமனங்களை இடைநிறுத்துமாறு TISL மேலும் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கும் TISL நிறுவனமானது இவ்வாறான நிலைமைகளை தொடர்ந்தும் கண்காணிப்பதோடு, பொது நிறுவனங்களில் நெறிமுறை மற்றும் சட்ட வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பெண்கள் அரசியலில் பிரவசிக்கக் கூடிய அவர்கள் மனநிலையில் மாற்றம் வேண்டும் என்கிறார் வேட்பாளர் மிதிலைச்செல்வி!

பு. கஜிந்தன்



பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே பெண்கள் அரசியலில் பிரகாசிக்க முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார்.

27-10-2024 அன்று சனிக்கிழமை தந்தை செல்வா நினைவு அரங்கில் இடம் பெற்ற வேட்பாளரகள் பொதுமக்கள் கேள்வி பதில் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலில் ஆர்வமுள்ள பெண்களின் வகிபாவம் அரசியலில் குறைந்து கொண்டு செல்கின்றது.

தமிழ் மக்கள் சார்ந்து எந்த ஒரு பெண் பிரதிநிதியும் கடந்த பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை.

வடக்கு மாகாணம் சார்ந்து பெண் பிரதிநிதி பாராளுமன்றம் செல்லமைக்கு ஆண்களை நான் குறை கூற விரும்பவில்லை.

அரசியல் கட்சிகளில் திறமையான பெண்களை வேட்பாளராக நிறுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைதான் நானும் தமிழரசு கட்சியில் 10 வருடங்களாக பல்வேறு பதவி நிலைகளை வகித்தும் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் திட்டமிட்ட முறையில் மறுக்கப்பட்டது.

தற்போது விக்னேஸ்வரன் ஐயாவின் தமிழ் மக்கள் கூட்டணியில் மா சின்னத்திரை முறை பாராளுமன்ற தேர்தலில் நான் களமிறங்கியுள்ள நிலையில் நாங்கள் வெற்றி பெற்றால் பாராளுமன்றம் செல்லலாமா என கேட்டேன் அவர் விருப்பு வக்கு அதிகமாகள பெற்று பாராளுமன்றம் செல்பவர்கள் செல்லலாம் எனக் கூறினார்.

ஏன் நான் இதை அவரிடம் கேட்டேன் என்றால் அனேகமான கட்சிகள் ஆண் வேட்பாளர்கள் பாராளுமன்றம் செல்வதற்காக பெண்களை வாக்கு சேகரிப்பவர்களாக பயன்படுத்துவார்கள்.

விருப்பு வாக்கில் முன்னிலை பெற்றாலும் இறுதி நேரத்தில் கட்சி இன்னொருவருடைய பெயரை கூறி இவரை பாராளுமன்றம் அனுப்புவோம் வழிபடுங்கள் என கேட்பார்கள் கேட்ட வரலாறுகளும் இடம்பெற்றுள்ளது.

இலங்கை சனத்தொகையில் ஆண்களை விட பெண்களே சதவீதத்தில் அதிகமாக உள்ள நிலையில் பெண்களே பெண்களுக்கு வாக்களிப்பதில்லை.

ஆகவே பெண் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றம் செல்ல வேண்டுமானால் வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

# சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் திபாவளி தினத்தை முன்னிட்டு பொலிஸாரின் ஏற்பாட்டில் பூஜை வழிபாடுகள்!



தீபாவளி தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை பொலிசாரின் ஏற்பாட்டில் பண்ணாகம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் 31ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் இடம்பெற்றன.

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் வேண்டக இந்த பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பு அதிகாரி திரு.கொஸ்தா தலைமையில் இந்த பூஜை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இதில் வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் திபாவளி தினத்தை முன்னிட்டு பொலிஸாரின் ஏற்பாட்டில் பூஜை வழிபாடுகள்!

வசாவிளான் மத்திய கல்லூரியூடாக அச்சுவேலி நோக்கி செல்லுகின்ற சுமார் 2 கிலோமீட்டர்கள் தூரம் கொண்ட வீதியானது வெள்ளிக்கிழமை (01.11.2024) திறந்து வைக்கப்படவுள்ளது.

இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள குறித்த வீ-தியானது நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் திரு.வேதந-ாயகன் அவர்கள் அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களுடனான சந்திப்பின்போது குறித்த வீதியை நிறைந்து வைத்து, மக்களின் போக்குவரத்துக்கு வழி சமைக்குமாறு கோரிக்கையை முன்வைத்தார்.

அந்தவகையில் நாளையதினம் குறித்த வீதியானது யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள்
Canadian News

# உங்களுக்காக ஒன்டாரியோ மாகாணத்தை உருவாக்குதல்:




ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர் Peter Bethlenfalvy அவர்கள் 2024 ஒன்டாரியோ பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு: உங்களுக்காக ஒன்டாரியோவை உருவாக்குதல் ஆகியவற்றை வெளியிட்டார். வளர்ந்து வரும் நமது சமூகங்களுக்குத் தேவையான முக்கியமான உள்கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்கும், தடையை குறைப்பதற்கும், குறைந்த வரிகளை வைத்திருப்பதன் மூலமும், அதிக பணத்தை உங்கள் பைகளில் வைப்பதன் மூலமும் வாழ்க்கையை மிகவும் மலிவாக மாற்றுவதற்கு அரசாங்கம் நிதி ரீதியாக பொறுப்பான அணுகுமுறையை தொடர்கிறது.

"ஒன்டாரியோ குடும்பங்களை ஆதரிக்க எங்கள் அரசின் ஒற்றுமை மிகவும் வலுவாகவே உள்ளது," என்று MPP கனபதி தெரிவித்தார். "இந்த பொருளாதார நிட்சயம் அற்ற காலங்களில், $200 வரி திரும்பப்பெறும் தொகை மற்றும் நீட்டிக்கப்பட்ட எரிபொருள் வரி தள்ளுபடி குடும்பங்களின் அன்றாட செலவுகளை குறைப்பதற்கான முக்கியமான படியாகும். இக்கடன் முறையானது உடனடி நிவாரணத்தையும் நீண்டகால நிலைத் தன்மையையும் சமனமாக்குகிறது, இன்றைய ஒன்டாரியர்களுக்கு உதவியாளராகவும் எதிர்கால தலைமுறைகளுக்கு பாதுகாப்பான ஒரு நாளைப் பெறுவதற்கும் வழிவகுக்கிறது."

"எங்கள் அரசாங்கத்தின் பொறுப்பான அணுகுமுறை 2024 பட்ஜெட்டில் இருந்து மேம்பட்ட நிதி நிலையை ஏற்படுத்தியுள்ளது, வரிகளை குறைவாக வைத்திருக்கவும், சாலைகள், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகள் போன்ற உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்யவும் மற்றும் ஒன்றாறியோ குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும் எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக அனுமதிக்கிறது. செலவு குறைகிறது" என்று அமைச்சர் Peter Bethlenfalvy கூறினார். "ஒன்டாரியோவின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், ஒன்றாறியோவின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் நாங்கள் தொடர்ந்து பொறுப்புடன் முதலீடு செய்யப் போகிறோம், எங்கள் மாகாணத்தை வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் சிறந்த இடமாக மாற்றுவோம், அதே நேரத்தில் எதிர்கால சந்ததியினருக்கான கடன் சுமையைக் குறைக்கிறோம்."

அரசாங்கத்தின் திட்டம் பற்றாக்குறையைக் குறைத்து, 2026-27க்குள் வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்துவதற்கான பாதையைத் தக்க வைத்துக் கொள்கிறது, நிச்சயமற்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிற தலையீடுகள் இருந்தாலும். 2024 வரவுசெலவுத்திட்டத்துடன் ஒப்பிடுகையில், ஒன்றாறியோ உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 2024 இல் வேலைவாய்ப்பு ஆகிய இரண்டிலும் வலுவான வளர்ச்சியைக் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2024 வீழ்ச்சி பொருளாதார அறிக்கையில் அரசாங்கம் எவ்வாறு செலவுகளைக் குறைக்கிறது என்பதற்கான சிறப்பம்சங்கள்:

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கூ200 வரி செலுத்துவோர் தள்ளுபடியை வழங்குதல், இது அதிக வட்டி விகிதங்கள் மற்றும் மத்திய கார்பன் வரியின் முகமாக ஒன்றாறியோ குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும். இந்த முன்மொழியப்பட்ட $200 வரி செலுத்துவோர் தள்ளுபடியானது ஒன்றாறியோவில் உள்ள தகுதியுள்ள அனைத்து பெரியவர்களுக்கும், டிசம்பர் 31, 2024க்குள் தங்களின் 2023 வருமான வரி மற்றும் பலன்களைத் தாக்கல் செய்தவர்களுக்கு அனுப்பப்படும். தகுதியுள்ள குடும்பங்கள் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் கூடுதலாக $200 பெறுவார்கள்.

ஜூன் 30, 2025 வரை பெட்ரோல் மற்றும் எரிபொருள் (டீசல்) மீதான வரி விகிதம் லிட்டருக்கு 9 காசுகளாக இருக்கும் வகையில் தற்காலிக எரிவாயு வரி மற்றும் எரிபொருள் வரி விகிதக் குறைப்புகளை மேலும் நீட்டிக்க முன்மொழிகிறது. இது ஒன்டாரியோ குடும்பங்களுக்கு உதவும்.

2026 ஆம் ஆண்டு தொடங்கி, 1,360 தகுதியான இளங்கலை மாணவர்களுக்கான டுநயசெ யனெ ளுவயல மானியங்களை விரிவுபடுத்த மூன்று ஆண்டுகளில் மில்லியன், அவர்கள் பட்டம் பெற்றவுடன் நோயாளிகளின் முழு விபரங்களுடன் மருத்துவப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதில் 2026/27 கல்வியாண்டுக்கான $17.7 மில்லியன் அடங்கும். குடும்ப மருத்துவர்களுக்கான சராசரி இணைப்பு விகிதங்களின் அடிப்படையில், மொத்த முதலீடு கூடுதலாக 1.36 மில்லியன் மக்களை முதன்மை சிகிச்சைக்கு இணைக்க உதவும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதியானது, ஒன்றாறியோ முழுவதிலும் உள்ள எந்தவொரு சமூகத்திலும் ஒரு மருத்துவராக சேவை செய்யும் காலத்திற்கு ஈடாக அனைத்து கல்வி மற்றும் புத்தகங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற பிற நேரடி கல்விச் செலவுகளை உள்ளடக்கும்.

இங்ஙனம்,
லோகன் கணபதி, ஒன்டாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர்


Plan
Design
Build
Paramount
Custom Homes Ltd.
Quality comes first
Build your Dream Home With Us
RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION
ARCHITECTURAL DRAWINGS
OBTAINING BUILDING PERMITS
REZONING
LAND SEVERANCE
FINANCING FOR CONSTRUCTION
EXPERIENCE - 10 + YEARS
Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1
416-335-5885
TARION CERTIFIED BUILDER
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION


அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்
UTHAYAN
உதயன்
உதயன் பத்திரிகையின்
28வது ஆண்டு பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும்
DEC. 14th 2024
Toronto Voice Of Humanity
சிறப்பு சொற்பொழிவாளராக,
திரைப்பட இயக்குனரும், தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய,
கரு பழனியப்பன் கலந்து கொள்கின்றார்
அத்துடன் இசை, மற்றும் நடனங்கள்
இடம்:- Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave),
காலம்:- 14-12-2024 சனிக்கிழமை -6.00 PM
Tickets:- 416 732 1608 or 647 762 9512


இனிய தீபாவளி வாழ்த்துகள்
Oct. 31, 2024
எங்கும் ஒளி மிளிர, என்றும் நம்பிக்கை மலர,
இந்த தீபாவளியை அனைவரும் இணைந்து
இனிதே கொண்டாடுவோம்.
LOGAN KANAPATHI - MPP, MARKHAM-THORNHILL
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Logan Kanapathi LoganKanapathi Logan_Kanapathi logankanapathi


எப்போதையும் விட அதிக மக்கள் பணி புரிகிறார்கள்
ஒன்டாரியோவில் 2018இலிருந்து 800,000க்கும் மேற்பட்ட வேலைகள் அதிகரித்துள்ளன. முன்பை விட அதிக மக்கள் தங்கள் வீட்டிற்கு பெரும் ஊதியத்தை எடுத்துச் செல்கிறார்கள்.
இவை எல்லாமே இங்கே நடக்கின்றன.
ontario.ca/RebuildingOurEconomy
ஒண்டாரியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன்
Ontario


Toronto District School Board
ஆரம்ப பிரன்ச் மொழியை கற்றுக்கொள்ளல் கனிஸ்ட பாலர் வகுப்புகளில் தொடங்குதல்
விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி தொடக்கம்: நவம்பர் 4, 2024
விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதி நாள்: நவம்பர் 29, 2024
இணயவழி மூலம் விண்ணப்பிக்க:
www.tdsb.on.ca/french


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva 416-706-8160

# AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC


# INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE
IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.





AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

# இலங்கை அரசியலிலிருந்து ஒதுங்கிய "பெரும் தலைகள்"



**"அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட பலரும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ளமை இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடுவதற்காகவா? அந்தளவுக்கு எமது அரசியல்வாதிகள் சிந்திக்கக் கூடியவர்களா?, விட்டுக்கொடுக்கக் கூடியவர்களா?, நல்லவர்களா? அல்லது மக்கள் செல்வாக்கை இழந்து விட்டனரா? அல்லது மக்களின் "மறதி"யை பயன்படுத்தி மீண்டும் பாய்வதற்காக 5 வருடங்களுக்கு பதுங்குகின்றனரா?"**

------------------------------------------------------------ - கே. பாலா ----

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களுக்காக 8352 வேட்பாளர்கள் களமிறங்கி முட்டி மோதிவரும் நிலையில் இலங்கையின் 9 ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மக்கள் வாக்களிப்பு மூலம் தெரிவான 196 எம்.பி.க்கள், தேசியப்பட்டியல் மூலம் தெரிவான 29 எம்.பி.க்கள் உள்ளிட்ட 225 எம்.பி.க்களில் 58 எம்.பி.க்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிக் கொண்டுள்ளமை ஏன் என்ற பெரும் கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு மூலமான 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 7452 வேட்பாளர்கள் களமிறங்கிய நிலையில் அந்த வேட்பாளர் எண்ணிக்கை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 936 வேட்பாளர்களினால் அதிகரித்துள்ளதுடன் இம்முறை போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையும் பெருமளவில் அதிகரித்துள்ளது.

அதாவது எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் 8352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். 22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்த நிலையில் அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டதால் 690 குழுக்கள் தேர்தல் களத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

பாராளுமன்றத்தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 196 ஆசனங்களை வெற்றி கொள்வதற்காக இடம்பெறவுள்ள இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5006 வேட்பாளர்களும் 3346 சுயேச்சைக்குழு வேட்பாளர்களும் களமிறங்கியுள்ளனர். இவர்களுக்கு 17,140,354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இது நாட்டிலுள்ள 2052 வாக்காளர்களுக்கு ஒரு வேட்பாளர் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

மேலும் 29 தேசியப்பட்டியல் பாராளுமன்ற ஆசனங்களுக்காக 469 உறுப்பினர்களை அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் முன்மொழிந்துள்ளன. இது ஒரு ஆசனத்துக்கு 16 தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் என்ற போட்டியை உருவாக்கியுள்ளது. இவ்வாறு கடும் போட்டிகளுக்கு மத்தியில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளதால் பிரசாரங்கள், வாக்குறுதிகள், சேறடிப்புகள், இன, மதவாதங்கள், பொய் ,பித்தலாட்டங்கள் என தேர்தல் களம் அதிர்ந்து கொண்டிருக்கின்றது.

எப்பாடுபட்டேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகிவிட வேண்டுமென்ற கனவில், பேராசையில், கொள்கையில், பணத்திற்காக, வாக்குகளை சிதறடிப்பதற்காகவென பல நோக்கங்களில் பலர் புதிதாக அரசியல் களம் புகுந்துள்ள நிலையில் மறுபுறம் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக, பிரதி அமைச்சர்களாக இராஜாங்க அமைச்சர்களாக, அமைச்சர்களாக பிரதமராக, ஜனாதிபதியாக இருந்து அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட பலரும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ளமை நல்லெண்ணமா, சகுனித்தனமா, பதுங்கலா அல்லது மீண்டும் பாய்வதற்கான தற்காலிக ஓய்வா என பல சந்தேகங்கள் மக்களிடம் ஏற்பட்டுள்ளன. ஏனெனில் தேர்தலில் போட்டியிடாமைக்கான சரியான, தெளிவான காரணங்களை இவர்களில் பலரும் வெளியிடவில்லை.

இவ்வாறு போட்டியிடாது ஒதுங்கியவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. அரசியலில், அதிகாரத்தில் கோலோச்சியவர்கள். அதாவது இந்த 58 எம்.பி.க்களில் பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன, முன்னாள் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்தன, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான நீதியரசர். விக்னேஸ்வரன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவரான முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஐக்கிய குடியரசு முன்னணித் தலைவரான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, முன்னாள் சபாநாயகர்களான சமல் ராஜபக்ச, மஹிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட பிரபலமானவர்கள் பலர் இம்முறை பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிடவும் இல்லை. இவர்களில் தினேஷ் குணவர்தனவைத் தவிர்ந்த வேறு எவரினது பெயர்கள் தேசியப்பட்டியலில் இடம்பெறவுமில்லை.

நடைபெறவுள்ள தேர்தலில் ராஜபக்ச குடும்பத்திலிருந்து சமல் ராஜபக்சவின் மகனான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச போட்டியிடும் நிலையில் மஹிந்த ராஜபக்சவின் மகனான முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளார். ஏனையவர்களான மஹிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச என எந்தவொரு ராஜபக்ஸக்களும் இம்முறை போட்டியிடாது ஒதுங்கியுள்ளமைதான் பெரும் பேசு பொருளாகியுள்ளது. ராஜபக்ஸக்கள் மக்கள் செல்வாக்கை இழந்து விட்டனரா அல்லது பயந்து விட்டனரா அல்லது மீண்டும் பாய்வதற்காக 5 வருடங்களுக்கு பதுங்குகின்றனரா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அதேவேளை இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதவர்களில் கடந்த பாராளுமன்றத்தில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நீதியரசர் விக்னேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராத லிங்கம் ஆகிய தமிழர்களும் அலிசப்ரி, நஸீர் அஹமட், பௌசி, முஹமட் முஸம்மில், ஹரிஸ் ஆகிய முஸ்லிம்களும் ஏனையோர் சிங்களவர்களுமாவர். இவர்களில் விக்னேஸ்வரன், வாசுதேவ நாணயக்கார, ஜோன் செனவிரத்ன போன்றவர்கள் வயது மூப்பின் காரணமாக இவ்வாறான முடிவை எடுத்திருந்தாலும் ஏனையவர்கள் ஏன் ஒதுங்கியுள்ளனர் என்ற கேள்விகளும் உண்டு.

2022 மார்ச் இறுதியில் வெடித்த "அரகலய" மக்கள் புரட்சியில் "ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்ற முக்கிய கோஷம் முன்வைக்கப்பட்ட நிலையிலும் இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் பெண்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படும் தற்போதைய நிலையிலும் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த பலர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் தவிர்ப்பது போராட்டக்காரர்களின் கோஷத்துக்கு மதிப்பளித்தா அல்லது இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடுவதற்காகவா? அரசியலில் ஆண்ட பரம்பரையான ராஜபக்ச சகோதரர்களில் ஒருவர் கூட நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதுள்ளமை "ராஜபக்ச குடும்ப ஆட்சி" இனி இலங்கை அரசியலில் இல்லை என்று கருத முடியுமா?

இவ்வாறு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது விலகியவர்களில் சிலர் நாம் இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிட வேண்டும் அவர்களுக்கு பின்னால் நின்று அவர்களை வழிநடத்த வேண்டும் என்பதற்காகவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை எனக் கூறுவதனை நம்ப முடியுமா? அந்தளவுக்கு எமது அரசியல்வாதிகள் சிந்திக்கக் கூடியவர்களா?, விட்டுக்கொடுக்கக் கூடியவர்களா, அந்தளவுக்கு நல்லவர்களா? அல்லது சிறந்த நடிகர்களா, நரித்தனமான சிந்தனை கொண்டவர்களா?

இதில் இவர்கள் எந்த வகையினர் என்பதனை அறிந்து கொள்ள மருத்துவத்துறையில் பயிலும் பயிற்சி மருத்துவர்களுக்கு மூத்த மருத்துவர்கள் வழங்கும் அறிவுரை ஒன்றே போதுமானது. இது மருத்துவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து துறையினருக்கும் பொருந்தக்கூடியது. அதாவது "ஒரு சத்திர சிகிச்சையை செய்து முடிப்பவர் நல்ல மருத்துவர். ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்ய வேண்டுமெனத் தெரிந்தவர் சிறந்த மருத்துவர். ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்யக்கூடாது என்பதை தெரிந்தவரே அதி சிறந்த மருத்துவர்" என்பதே அந்த மூத்த மருத்துவர்களின் அறிவுரை. ஏனெனில் செய்யக்கூடாத நேரத்தில் சத்திரசிகிச்சையை செய்தால் "சத்திரசிகிச்சை வெற்றி நோயாளி மரணம்" நிலை ஏற்பட்டு விடும்.

அந்தவகையில் தான் தற்போது எதிர்வரும் நவம்பர் 14 ஆம்திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்துக்கான தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ள இந்த 58 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெருமளவானோர் "ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்யக்கூடாது என்பதை தெரிந்த அதி சிறந்த மருத்துவர்" போன்றவர்களேயாவர். இந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் தற்போதைய பாராளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிட்டால் தமது முடிவு என்ன என்பதை நன்றாகவே அறிந்தவர்கள். அதனால்தான் கௌரவமாக ஒதுங்கி தங்கள் அதி சிறந்த அரசியல்வாதிகள் என்பதனைக் காட்டியுள்ளனர்.

எனவே பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற இவர்களின் முடிவு நிரந்தரமானதல்ல. தற்காலிகமானது. அதிலும் அரசியலையே தமது மூச்சாக வைத்துள்ள ராஜபக்ஸக்கள் ஒருபோதுமே அரசியலிலிருந்து முற்றாக ஒதுங்கும் இவ்வாறான நிரந்தர முடிவை எடுக்க மாட்டார்கள். அவர்கள் இலங்கையின் அரசியலுக்கமைய தம்மை மாற்றிக்கொண்டவர்கள் அல்ல. தமக்கு ஏற்றாற்போல் இலங்கை அரசியலை மாற்றிக்கொண்டவர்கள். ராஜபக்ஸ குடும்பத்தின் மீது நாட்டு மக்களுக்கு தற்போதுள்ள கோபம், விரக்தி, வெறுப்பு, பகையை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் மகனும் ராஜபக்ஸ பரம்பரையின் முக்கிய விழுதுமான நாமல் ராஜபக்சவுக்கு கிடைத்த வாக்குகள் மூலம் உணர்ந்து கொண்டதாலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஸ க்களின் தோல்வி உறுதி என்பதனை தெரிந்த கொண்டதாலுமே ராஜபக்சக்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கி மீண்டும் ஒரு பாய்ச்சலுக்காக அடுத்த பாராளுமன்றத்தேர்தல் வரை காத்திருக்க முடிவு செய்துள்ளனர்.

மக்களிடமிருந்து பிரியாததும் பிரிக்க முடியாததும் "மறதி" என்பது இலங்கை அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரியும். அதனால்தான் குற்றவாளிகளும், ஊழல்வாதிகளும், மோசடிப் பேர் வழிகளும், பாதாளக் குழுத் தலைவர்களும் மீண்டும் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிக் கொண்டிருக்கின்றனர். எனவே தற்போது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ள இவர்கள் தமது அசிங்கப் பக்கங்களை மக்கள் மறப்பதற்காக அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வரையிலான 5 வருட காலத்தை தியாகம் செய்துள்ளனர் அதாவது மக்களின் மறதிக்காக இவர்கள் காத்திருக்கின்றனர். அதன்பின்னர் மீண்டும் உத்தமர்களாக அரசியல் களம் புகுவார்கள். பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரிப்பார்கள். அதுவரைக்கும் இவர்கள் தற்காலிக ஓய்வில் இருக்கப் போகின்றார்கள்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய "வாழ்நாள் சாதனையாளர்கள் விருதுவிழா – 2024" சிறப்பாக நடந்தேறியது

- குரு அரவிந்தன்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "விருது விழா - 2024" ஸ்காபரோ சிவிக்சென்றர் மண்டபத்தில் 26-10--2024 அன்று இணையத்தின் தலைவர் திரு. கனகசபை ரவீந்திரநாதன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 31 ஆண்டுகளாக இந்தக் கனடிய மண்ணில் சிறப்பாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர்களாக திரு. தெ.சண்முகராசா, திரு. திருமாவளவன், திரு. வி.கந்தவனம், திரு. சின்னையா சிவநேசன், திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம், திரு. சிவபாலு தங்கராசா, திரு. சின்னையை சிவநேசன், திரு. சி. சிவநாயகமூர்த்தி, பேராசிரியர் திரு. இ. பாலசுந்தரம், திரு. குரு அரவிந்தன், திரு. அகணி சுரேஸ், திரு. க. ரவீந்திரநாதன் ஆகியோர் இதுவரை பணியாற்றியிருந்தனர்.

ஒருவர் வாழும்போதே அவரைக் கௌரவிக்கும் முகமாக அவர்கள் தமிழ் மொழி மற்றும் தமிழ்க்கலாச்சார வளர்ச்சிக்காக ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டி மட்டுமல்ல, புலம்பெயர்ந்த மண்ணிலும் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஆர்வத்தோடு இவர்கள் காட்டும் ஈடுபாட்டைப் பாராட்டியும், இந்த "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கும் நிகழ்வு கனடாவில் இடம் பெற்றிருந்தது. கனடாவில் ஒரு இணையத்தால் வழங்கப்படும் உயர் இலக்கிய விருதாக இந்த விருது மதிக்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது. இந்த விருதுகளைப் பெறுவதற்காகக் கனடா தமிழ் சமூகத்தில் இருந்து மதிப்புக்குரிய ஆறு பெரியோர்களை செயற்குழுவினர் இம்முறை தெரிவு செய்திருந்தார்கள்.










மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடாப்பண், தமிழ்தாய் வாழ்த்து ஆகியன செல்வி சோலை இராஜ்குமார், சென்னி இராஜ்குமார், சோழன் இராஜ்குமார், டிலன் கென்றிக் பிளசிடஸ் ஆகியோரால் இசைக்கப்பெற்றன. அடுத்து அகவணக்கம் இடம் பெற்றது. இணையத்தின் துணைத்தலைவர் திரு. குரு அரவிந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம் பெற்றது. இதில் திருமதி. வனிதா குகேந்திரனின் கலைக்கோயில் மாணவிகளான செல்வி. ஆதுரா கமலராஜன், செல்வி. ஆனிரா கமலராஜன், செல்வி. வஸ்மிகா ராகுலன் ஆகியோர் பங்கு பற்றினர். இதைத் தொடர்ந்து திரு. க. ரவீந்திரநாதனின் தலைவர் உரை இடம் பெற்றது. அடுத்து செல்வன் தருண் செல்வம், செல்வி வைஸ்ணவி சதானந்தபவன் ஆகியோரது இளையோர் உரையும், காப்பாளர் சிந்தனைப்பூக்கள் திரு. எஸ். பத்மநாதனின் உரையும் இடம் பெற்றன.








அடுத்து விருது விழா - 2024 மலரைத் தொகுப்பாசிரியர் திரு. குரு அரவிந்தன் வெளியிட்டுவைக்க, தலைவர் திரு. ரவீந்திரநாதன் கனகசபை பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வரலாறு இந்த மலரில் புகைப்படங்களுடன் சுருக்கமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக் குரு அரவிந்தன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்காக பண்டிதர் திரு. ச.வே பஞ்சாட்சரம், கலாநிதி திருமதி. கௌசல்யா சுப்பிரமணிய ஐயர், தேசபாரதி திரு. வே. இராசலிங்கம், எழுத்தாளர் திரு. முருகேசு பாக்கியநாதன், பத்திரிகை ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம், கலைஞர் திரு. வயிரமுத்து திவ்வியராஜன் ஆகியோரே செயற்குழுவினரால் இம்முறை தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களைப் பற்றிய அறிமுக உரையை திருமதி. ராஜினி சுபாகரன், திருமதி. நாகேஸ்வரி ஸ்ரீ குமரகுரு, திரு. ஜெகதீஸ்வரன் ஐயாத்துரை, பாஸ்டர் திரு. சோதி செல்லா, திருமதி. கமலவதனா சுந்தா, திருமதி. ஜோதி ஜெயக்குமார் ஆகியோர் நிகழ்த்தினர். விருதாளர்கள் சான்றிதழ், விருது மற்றும் மலர்க்கொத்துக் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து விருதாளர்களின் ஏற்புரை இடம் பெற்றிருந்தது.

சென்ற வருடம் - 2023, திரு. அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் விருதாளர்களாகப் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, பேராசிரியர் கலாநிதி நாகராஜ ஐயர் சுப்பிரமணியன், முனைவர் பால சிவகடாட்சம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், திரு. தங்கராசா சிவபாலு, திரு. சின்னையா சிவநேசன், திரு. பாலா குமாரசாமி (தேவகாந்தன்), சிந்தனைப்பூக்கள் திரு. பத்மநாதன், திரு. தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் (சோக்கல்லோ சண்முகம்), திரு. தெய்வேந்திரன் சண்முகராஜா (வீணைமைந்தன்) ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவித்திருந்தோம்.

இணைத்தின் ஆரம்பகாலங்களில் தலைவராகவும், காப்பாளராகவும் இருந்த அமரர் கவிஞர் திரு. வி. கந்தவனம், காப்பாளராக இருந்த மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி, காப்பாளர்களாக இருந்த அமரர் எழுத்தாளர் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம், அமரர் க.தா. செல்வராசகோபால், அமரர் க.செ. நடராசா, மற்றும் அமரர் வித்துவான் க. செபரத்தினம், அமரர் பண்டிதர் மா.சே. அலெக்ஸ ாந்தர், அமரர் மொகமட் ஹன்ஸீர் ஆகியோருக்கும் எழுத்தாளர் இணையம் ஏற்கனவே 10வது ஆண்டு நிறைவின் போதும், அதன் பின் வெள்ளிவிழாவின் போதும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு மலரை வெளியிட்டு வைத்த எழுத்தாளர் குரு அரவிந்தன் மெய்நிகர் மூலம் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் எழுத்தாளர் அரங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். "இதுவரை 26 எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து தங்களைப் பற்றியும், தங்கள் ஆக்கங்கள் பற்றியும் உரையாற்றி இருக்கின்றார்கள். இந்த நிகழ்வில் இதுவரை பங்கு பற்றியவர்களின் பெயர்களை இங்கே தருகின்றேன். எழுத்தாளர் குரு அரவிந்தன், சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், சின்னையை சிவநேசன், பேராசிரியர் இ. பாலசுந்தரம், பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், பண்டிதர் சா.வே. பஞ்சாச்சரம், எழுத்தாளர் கனி விமலநாதன், எழுத்தாளர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், எழுத்தாளர் இராசலிங்கம் வேலாயுதர், எழுத்தாளர் பால சிவகடாட்சம், எழுத்தாளர் த. சிவபாலு, கலைஞர் சோக்கெல்லோ சண்முகம், எழுத்தாளர் வீணைமைந்தன் கே.ரி. சண்முகராசா, எழுத்தாளர் முருகேசு பாக்கியநாதன், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், கலைஞர் வைரமுத்து திவ்வியராஜா, கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம், எழுத்தாளர் ரவீந்திரன் கனகசபை, எழுத்தாளர் சாம் தில்லையா, கவிஞர் புகாரி, நாடகக் கலைஞர் கணபதி ரவீந்திரன், எழுத்தாளர் அகில் சாம்பசிவம், எழுத்தாளர் செல்வம் அருளானந்தம், எழுத்தாளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராசா, எழுத்தாளர் தேவகாந்தன், எழுத்தாளர் வ.ந. கிரிதரன், எழுத்தாளர் குரும்பசிட்டி ஐ. ஜெகதீசன் ஆகியோர் இதுவரை கலந்து கொண்டனர் என்று குறிப்பிட்டார்.




விருதாளர்களின் ஏற்புரையைத் தொடர்ந்து, விளம்பரதாரர்களும், தன்னார்வத் தொண்டர்களும், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களும் கௌரவிக்கப்பட்ட பின், செயலாளர் முனைவர் திருமதி. வாசுகி நகுலராஜா அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது. இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற முன்னின்று பாடுபட்ட அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சித் தொகுபாளர்களாக திருமதி. ஜோதி ஜெயக்குமார், திரு. அகணி சுரேஸ் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றியிருந்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார் மாவட்ட கலாசார விழா

## மாவட்டத்தை சேர்ந்த 3 பேராசிரியர்களும் கௌரவிப்பு





- எஸ்.ஆர்.லெம்பேட் (29-10-2024)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட கலாசார விழா 29ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

சர்வமத தலைவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ், நானாட்டான் பிரதேசச் செயலாளர் கே.சிவசம்பு, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஜ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக ஆங்கிலத்துறை பேராசிரியர் ஜெயசீலன் ஞானராஜ், பொருளியல் பேராசிரியர் நேவில் மொறாயஸ், தாவரவியல் பேராசிரியர் சந்திரகாந்தா மகேந்திர நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது விருந்தினர்கள் மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் மாலை அணிவிக்கப்பட்டு பண்பாட்டு பேரணியுடன் மன்னார் நகர சபை மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றது. களிகம்பு, கூத்து வழி நடனம், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, நடனம், நாட்டுக்கூத்து உள்ளிட்ட நிகழ்வுகள் பிரதேசச் செயலாளர் பிரிவுகள் ஊடாக அரங்கேற்றப்பட்டதோடு, கலைஞர்களும் விருந்தினர்களினால் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வின் சிறப்பம்சமாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கிலத்துறை பேராசிரியர் ஜெயசீலன் ஞானராஜ், பொருளியல் பேராசிரியர் நேவில் மொறாயஸ், தாவரவியல் பேராசிரியர் சந்திரகாந்தா மகேந்திர நாதன் ஆகிய பேராசிரியர்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நறுவிலிக்குளம் கிராமத்தில் வீட்டில் சாத்திரம் பார்ப்பதாக கூறி சுய நினைவை இழக்கச் செய்து 20 இலட்சம் ரூபாய் தாலிக்கொடி திருட்டு

## முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



- எஸ்.ஆர்.லெம்பேட் (27-10-2024)

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் அங்குள்ள வீடு ஒன்றுக்குச் சென்று சாத்திரம் பார்ப்பதாக கூறி வீட்டில் இருந்தவர்களை சுய நினைவை இழக்கச் செய்து சுமார் 20 லட்சம் ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (25ம் திகதி) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நறுவிலிக்குளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறுவன் ஒருவருடன் சென்ற பெண் ஒருவர் கோவிலுக்கு நிதி சேகரிக்க வந்துள்ளதாக கூறியுள்ளார். இந்த நிலையில் அவர்கள் பணத்தை கொடுக்க குடிக்க நீர் கேட்டுள்ளனர்.

இதன் போது அவர்கள் குடிக்க நீர் கொடுத்து உள்ளனர். இதன் போது தான் சாத்திரம் பார்த்து கூறுவதாக கூறி பலவந்தப்படுத்தி வீட்டில் இருந்த இருவருக்கு சாத்திரம் பார்த்துள்ளார்.

இதன் போது குறித்த இருவருக்கும் சுய நினைவை இழக்கச் செய்யும் வகையில் மருந்து பூசிய நிலையில் குறித்த இருவரும் சுய நினைவை இழந்த நிலையில் குறித்த பெண் அணிந்திருந்த சுமார் 20 லட்சம் ரூபாய் பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளார்.

மாலை 5 மணிக்கு பின்னர் அவர்களுக்கு சுய நினைவு திரும்பிய நிலையில் குறித்த விடையம் தெரிய வந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை சந்தேகிக்கப்படும் குறித்த பெண் சிறுவன் ஒருவருடன் குறித்த பகுதியில் வீதியால் சென்ற CCTV விடியோ கட்சியும் வெளியாகி உள்ளது.



# காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளவும் மாவீரர்கள் நினைவாகவும் ஆளுக்கொரு மரம் நடுவோம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

போரின் முற்றுகைக்குள்ளும் இயற்கை எனது நண்பன் என்று சொல்லி சூழல் நல்லாட்சி ஆணையம், வனவளப் பாதுகாப்புப்பிரிவு என்பனவற்றை உருவாக்கி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம்.

இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம்பூமியையும் காப்பாற்றும். அந்த வகையில் மாவீரர்களைப் போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டுமுதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. பூமியின் சராசரி வெப்பநிலை ஆண்டுக்கு ஆண்டு எகிறிவருகிறது. காட்டுத்தீயும் வெப்ப அலைகளும் முன்னெப்போதையும்விட மூர்க்கம் கொண்டு பொசுக்கி வருகிறது. இன்னொருபுறம், பருவம் தப்பிக் கடும்மழை கொட்டுகிறது.

வருடாந்த மழை வீழ்ச்சி ஓரிரு நாட்களிலேயே பேய்மழையாகப் பொழிகிறது. இவை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கிலும் மண்சரிவிலும் சிக்கி உலகம் பூராவும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி வருகிறார்கள்.

துருவப் பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து செல்கிறது. இதனால் உலகநாடுகள் பலவற்றின் கரையோரங்களைக் கடல்நீர் விழுங்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

கடல் மட்ட உயர்வால் யாழ். குடாநாடு ஆனையிறவுப்பகுதியில் கடலால் துண்டிக்கப்பட்டுத் தனித் தீவாக உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அவலங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக் கில்லாமல் நாம் அழித்துத் தள்ளுவதே அடிப்படைக் காரணமாகும்.

பூமி சூடாகிவருவதன் எதிர்விளைவுகளாகக் கடும் வறட்சி ஏற்பட்டுத் குடிநீருக்காக நெடுந்தொலைவு அலைய வேண்டி ஏற்படும். பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து உணவுப் பாதுகாப்புக் கேள்விக்குறியாகும். கால்நடை வளர்ப்பைக் கைவிடவேண்டி ஏற்படும். வளியில் மாசுகள் அதிகரித்துச் சுவாசநோய்களால் மூச்சுத்திணற வேண்டி ஏற்படும்.

மனஅழுத்தம் ஏற்பட்டுத் தற்கொலை உணர்வு தூண்டப்படும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே நாம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் மது போதையில் வீடொன்றில் நுழைந்த நபர் ஒருவரால் தாக்குதல்





வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் மது போதையில் வீடொன்றில் உள்நுழைந்து நபர் ஒருவரால் (30.10.2024) அன்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தனது குழந்தை, மனைவியுடன் வீட்டில் இருந்த வேளை மதுபோதையில் அத்துமீறி உள்நுழைந்து தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்ததுடன் குடும்பஸ்தரின் மனைவி, பிள்ளைக்கும் கத்தியால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.


வீட்டிற்கு வெளியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள குறித்த குடும்பஸ்தரின் மோட்டார் சைக்கிளின் மீது கத்தியால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார்.

தனது மனைவி, பிள்ளை மீது கொலை முயற்சியில் ஈடுபட முயன்ற நபர் இறுதியாக மோட்டார் சைக்கிள் மீது கத்தியால் தாக்குதல் மேற்கொண்டு விட்டுச் சென்றது ஒரு வித அச்சத்தை ஏற்படுத்துவதால் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்படாமல் மதுபோதையில் மீண்டும் அச்சுறுத்துவதால் உடனடியாக அவரை கைது செய்யுமாறு பொலிசாரை கேட்டுக் கொண்டுள்ளார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1118

## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில், மட்டக்களப்பு

-------------

" கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் றானும்
களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்
உரந்தரு பொன்னூஞ்சலிசை ஓதுதற்கு
உம்பல்முகத் துடனுதித்தெய் வுலகு முய்யப்
புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்
பூங்காவில் வரச் செய்த புனிதன் றன்னை
நிரந்தரமா யுயிர்தோறும்தம் நிறைந்து நிற்கும்
நின்மலனாய் ஐங்கரன்றாள் நினைகுவாமே. "

தற்காலத்திலே மானிடவியல், சமூகவியல், ஒப்பீட்டுச்சமயம், தென்னாசிய வரலாறு ஆகிய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்து சமய வழக்காறுகள், வழமைகள், இந்து சமூக அமைப்பிலே ஆலயங்களும், சமயமும் பெறும் பங்கு, குடும்பம், தொழில் போன்றவற்றோடு சமயம் கொண்டுள்ள தொடர்பு, போன்ற பல விடயங்களை கல்வித்துறைசார்ந்த அறிஞர்கள் பலமொழிகளிலும் எழுதி வருகின்றனர். தற்காலத்தில் மேற்குலகிலும் இந்துசமயத்தின் கூறுகள் பலவும் மேற்குலக மக்களால் பின்பற்றப்பட்டு வருவதோடு, வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்பட்ட பொருளாகவும் இந்துசமயம் விளங்கி வருகின்றது. இவை யாவற்றினுடைய அடிநாதமாக விளங்குபவை இந்து ஆலயங்கள் எனின் அவை மிகையாகாது.

இந்துக்களின் வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆலய வளாச்சியின் மூலம் மக்களிடையே ஆன்மீக வளாச்சி ஏற்பட்டு வந்தமையை வரலாறுகள் மூலம் அறிய முடியும். பண்டைக்காலத்திலே அரசர்களும், சான்றோர்களும், அறங்காவலர்களும், ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஆலயங்களின்மூலம் சமயஉண்மைகளையும், சமய வாழ்க்கை முறையையும் உணர முடிவதோடு, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் சான்றோராகவும் விளங்க ஆலயங்கள் வழிகாட்டி வருகின்றன.

பாரம்பரியம் மிக்க இனமான தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, கலாச்சாரத்தை அழித்தொழிக்க எண்ணுவோர், இந்து ஆலயங்களை அழிப்பதில் முதன்மை வகிக்கின்றனர். தற்காலத்திலும் தமிழீழ தாயகத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள பல ஆலயங்கள் அழிவுக்குள்ளாகி இருப்பது கண்கூடு. இத்தகைய சூழ்நிலையில் ஆலய வரலாறுகளையும் அதனோடு தொடர்புடைய தமிழர் வரலாறு, மற்றும் தமிழர் பின்பற்றும் மரபுகளையும் அறிந்து பாதுகாப்பது அவசியமாகின்றது.

காவும் பொழிலும் கழிமுகமும், புள்ளணிந்து ஏரியும், இலங்கையின் சீரார் குணதிசையில், ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவை, தெங்கின் இளநீரும் தீம்பலாவின் கனிகளும் எங்கும் குறையாது வழங்கும் நன்னாடு, எனப் பல்லோராலும் போற்றப்படும் தகமை சான்ற திருநாடு மட்டக்களப்பு. இத்தகைய இயற்கை எழில்சூழ் மட்டக்களப்புத் திருநாட்டின் தென்பால், ஆரையம்பதி என்னும் அழகிய கிராமம் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் எல்லைகளாக தெற்கே தாழங்குடாவும், மேற்கே வாவியும், கிழக்கே கடலும், வடக்கே காத்தான்குடியும், அமைந்துள்ளன.

ஆரையம்பதியின் முகத்துவாரம்தெரு சனத்தொகை கூடிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் முகத்துவாரமாய் விளங்கியதால் முகத்துவாரம்தெரு எனக் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. ஸ்ரீ பரமநயினார் கோயிலென வழங்கும் ஐயனார்கோயில், முகத்துவாரம் தெருவிலுள்ளது. பரமநயினார் என்னும் பெயரானது, எல்லாம்வல்ல இறைவன் என்னும் பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு பரமநயினார் என்னும் பெயர் எல்லாம் வல்லவரான ஐயனாரைக் குறிப்பதாகவும் அமைகின்றது.

ஐயனார் வரலாறு புராணக்கதைகளோடு தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது. புராணக்கதைகள் மக்களுக்குச் சில விடயங்களை உணர்த்தவேண்டி எழுந்தவையாகக் கொள்ளவேண்டும். புராணக் கதைகள் புனைகதைகள் எனக் கருதுவதை விடுத்து, அவற்றிலே காணப்படும் சாரம் எவ்வாறு மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த அன்றுதொட்டு இன்று வரை உதவி வருகின்றது என்பதைக் கருத்திற் கொள்வது அவசியமாகின்றது. புாாணக்கதைகளிலே அறிவியலின் கூறுகளும் புதைந்துள்ளதை மனதிற்கொள்ளவெண்டும். கற்றோரும் மற்றோரும் வாழ்வாங்கு வாழவேண்டி எழுந்தவையாகவே புராணக்கதைகள் காணப்படுகின்றன. புராணக்கதைகள் கற்பனைவளங் கொண்டவையாகக் காணப்படினும், தற்காலவாழ்வியலில் இவற்றின் கூறுகளை உய்த்துணர முடிகின்றது. புராணம் என்பதற்குத் தொன்மை, பழமை என்ற கருத்துக்களும் காணப்படுகின்றன. அனேகமான புராணக் கதைகளின் சாரமாக, மக்கள் மனங்களிலே காணப்படும் ஆணவம், கன்மம், மாயை இவற்றை அகற்றி, மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் தன்மைகொண்டனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையிலேயே ஐயனாரின் தோற்றம்பற்றிய புராணக்கதையும் காணப்படுகின்றது. ஐயனாரின் தோற்றம் சாதாரண நிலையிலுள்ள மக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பினாலும், கால, தேச, வர்த்தமானங்களுக்கமையவும், வாழ்வியலை பல்வேறு நிலைகளில் மக்கள் வாழ்ந்தமையைப் புலப்படுத்தவும், சிவ, வைணவ ஐக்கியத்தை ஏற்படுத்தவும் நிகழ்ந்ததாகக் கொள்ள முடியும்.

அநீதிகள் பல புரிந்த மகிஷாசுரனை துர்க்கை கொன்றபோது, அவனது தங்கையாகிய மகிஷி கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்கப் பிரம்மதேவனை நோக்கித் தவம் இயற்றிப் பல வரங்களைப் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என வரம் பெற்ற மகிஷி, தேவர்களையும், மற்றவர்களையும் கொடுமைப்படுத்தி வந்தாள். அவளிடமிருந்து தப்பித்து நெடுநாள் வாழ எண்ணிய தேவர்கள், பாற்கடலைக் கடைந்து அமுது எடுக்க விரும்பினர். ஆனால் அசுரர்கள் தாம் நீண்டநாள் வாழவிரும்பி தேவர்களிடமிருந்து அமுதைப் பறித்து உண்ணத் தொடங்கினர்.

வளரும்...






# அன்பின் தொனி - 791

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை**

நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை. நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள். நாள்பார்க்கிற வளின் பிள்ளைகளே, விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்த சந்ததியாரே, நீங்கள் இங்கே கிட்டி வாருங்கள். நீங்கள் யாரைப் பரியாசம்பண்ணுகிறீர்கள்? யாருக்கு விரோதமாய் வாயைத் திறந்து, நாக்கை நீட்டுகிறீர்கள்? நீங்கள் துரோகம்பண்ணுகிற பிள்ளைகளும், கள்ளச் சந்ததி யாருமல்லவோ? நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோ காக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைக ளைக் கொன்றுபோடுகிறவர்கள். பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது; அவைகள், அவைகளே உன் வீதம்; அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து, போஜனபலியையும் செலுத்துகிறாய்; இவைகளின்மேல் பிரியப்படுவேனோ? நீ உயரமும் உன்னதமுமான மலைகளின்மேல் உன் மஞ்சத்தை வைக்கிறாய்; அங்கேயும் பலியிடும்படி ஏறுகிறாய். கதவுகளுக்கும் நிலைகளுக்கும் பின்னாக உன் ஞாபகக்குறியை வைக் கிறாய்; நீ என்னைவிட்டுப்போய் மற்றவர்களுக்கு உன்னை வெளிப்படுத்தினாய்; ஏறிப் போய் உன் மஞ்சத்தை அகலமாக்கி, அவர்களோடே உடன்படிக்கைபண்ணினாய்; அவர்களுடைய மஞ்சத்தைக் காண்கிற எல்லா இடத்திலும் அதை நேசிக்கிறாய். நீ தைலத்தைப் பூசிக் கொண்டு ராஜாவினிடத்தில் போகிறாய்; உன் பரிமளங்களை மிகுதியாக்கி, உன் ஸ்தானா பதிகளைத் தூரத்துக்கு அனுப்பி உன்னைப் பாதாளமட்டும் தாழ்த்துகிறாய்.

**நீ என்னை நினையாமலும், உன் மனதிலே வைக்காமலும் போகிறாய்**

வழிதூரமானதால் உழன்றுபோகிறாய்; அது விருதாவென்று நீ சொல்லுகிறதில்லை; உன் கைபெலத்தைக் கண்டுபிடித்தாய், ஆகையால் நீ ஆயாசப்படவில்லை. நீ யாருக்கு அஞ்சிப் பயப்படுகிறாய், நீ பொய்சொல்லுகிறாயே; நீ என்னை நினையாமலும், உன் மனதிலே வைக்காமலும் போகிறாய்; நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன் அல்லவா? ஆகையால் எனக்குப் பயப்படாதிருக்கிறாய். உன் நீதியையும் உன் கிரியைகளையும் நான் வெளிப்படு த்துவேன் அவைகள் உனக்கு உதவாது. நீ கூப்பிடும்போது, உன் கணங்கள் உன்னைத் தப்பு விக்கட்டும்; காற்று அவைகளையெல்லாம் பறக்கடித்து மாயை அவைகளைக் கொண்டு போம்; என்னை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்து, என் பரிசுத்த பர்வதத்திலே காணியாட்சிக்காரனாயிருப்பான். வழியை உயர்த்தி உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள் என்னப்படும். நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிற தற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன். நான் எப்போதும் வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை; ஏனென்றால், ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்துக்கு முன்பாகச் சோர் ந்துபோகுமே.

**- ஏசாயா 57: 1-16**

தொடரும்...

இலங்கை செய்திகள் Sri Lanka News

## ஏறாவூரில் போதை வியாபாரி ஒருவர் கைது செய்த பொலிசார் மீது தாக்குத் நடத்திய பெண் ஒருவர் உட்பட இருவர் கைது

**கனகராசா சரவணன்**

ஏறாவூர் மீராங்கேணி பிரதேசத்தில் 11230 மில்லிகிராம் ஹரோயின் போதை பொருளுடன் வியாபாரி ஒருவரை கைது செய்த பொலிசாரை கடமையை செய்யவிடாது அவர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட இருவரை 28ம் திகதி திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான அன்று இரவு முற்றுகையிட்ட பொலிசார் போதை வியாபாரி ஒருவரை 11230 மில்லிகிராம் ஹரோயின் போதை பொருளுடன் கைது செய்தனர்.

இதனையடுத்து பொலிசார் தமது கடமையை செய்யவிடாது பொலிசார் மீது தாக்குதல் மேற்கொண்ட 36 வயதுடைய பெண் ஒருவரையும் 24 வயதுடைய இளைஞன் ஒருவரையும் போதை வியாபாரி உட்பட 3 பேரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## கிழக்கிலங்கையின் முதல் மகளிர் கிரிக்கெட் நடுவராக செல்வி. எம்மா க்ளோரியா நியமிக்கப்பட்டுள்ளார்





மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றிவரும் செல்வி எம்மா க்ளோரியாவை இலங்கை கிரிக்கெட் சங்கம் கிழக்கின் முதல் மகளிர் கிரிக்கெட் நடுவராக தெரிவு செய்துள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் சங்கம் கிழக்கு மாகாண பாடசாலை களுக்கிடையிலான 16 வயதிற்குட்பட்ட மகளிர் கடினமான டென்னிஸ் பந்துப் போட்டிலின் நடுவராக அவர் கடமையாற்றினார்.

மட்டக்களப்பு சிசிலியா மகளிர் உயர்தர பாடசாலையின் பழைய மாணவியான இவர் மட்ட. வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியராகவும் கடமையாற்றிவரும் இவர் இலங்கை கிறிக்கெட் நடுவர் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளையின் நடுவர்களுள் ஒருவராவார்.

இவர் வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு மட்டக்களப்பு மண்ணுக்கு பெருமையடையச் செய்துள்ளார் என்பதும் குறிப்பிட த்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

## தென்னிலங்கைவாசிகள் நாட்டிய விஷச்செடி தமிழ் தேசிய கூட்டமைப்பை சீர்குலைத்து விட்டது - சுரேந்திரன் ஆதங்கம்!

**பு. கஜிந்தன்**





எமது ஒற்றுமையை குலைப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் நாட்டப்பட்ட விஷச் செடிகள் தற்போது விருட்சமாகி தமிழ் தேசியக் கூட்டமைப்பை சீர்குலைத்து விட்டது என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

27-10-2024 ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் மூளாயில் நடைபெற்ற தேர்தால் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தென் இலங்கையிலே பல தரப்பான வேட்பாளர்கள் பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொள்வது வழக்கம். ஆனால் தமிழர்கள் மாத்திரம் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஜனநாயக பரப்பிலும், ஆயுதப் போராட்டத்திற்கு பின்னர் ஆயுதப் போராட்ட அமைப்புகள் அனைவரும் ஜனநாயகத்துக்கு திரும்பிய பின்னரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தேர்தலில் களமிறங்கினார்கள்.

அதற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்று இணைந்து 22 பாராளுமன்ற உறுப்பினர்களை பிரசவித்து, ஒரு பலமான தேசிய கட்டமைப்பாக தமிழர்கள் திகழ்ந்து வந்ததை தென்னிலங்கை மிகவும் விருப்போடும், அவதானத்தோடும் உற்று நோக்கியது.

எங்களுக்குள்ளே பல்வேறு விதமான காட்சிகள் பிரிந்து நிற்கின்ற பொழுது தமிழர்கள் மாத்திரம் எப்படி ஒரே ஒரு கட்சியோடு ஒருமித்த நிலையிலே பயணிக்கிறார்கள் என்பதை அவர்கள் விசனத்தோடு கண்ணுற்றார்கள். இதற்கு நாங்கள் என்ன செய்யலாம் என்று சிந்தித்தார்கள். இந்த ஒற்றுமையை எவ்வாறு சீரழிக்கலாம் என சிந்தித்தார்கள்.

அதன் விளைவாக 2010ஆம் ஆண்டு காலப்பகுதியிலே சில விஷச் செடிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நட்டார்கள். தேசியம் என்ற பேரிலே அந்த செடிகள் கொடி விட்டு படர்ந்து விருட்சமாக வளர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்டங்கட்டமாக சின்னா பின்னப்படுத்த ஆரம்பித்தது.

தென் இலங்கையின் நிகழ்ச்சி நிழலை நிறைவேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான கட்சியாக இருந்த தமிழரசு கட்சியிலே இருந்து கொண்டு முடிவுகளை எடுக்கின்ற பொழுது அதனுடைய அங்கத்துவ காட்சிகளாக இருந்து, தமிழ் மக்களுக்காக ஆயுதமேந்தி தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த அமைப்புக்கள் இடம் கொடுக்க மறுத்தார்கள்.

தமிழரசு கட்சியானது தென் இலங்கையில் இருக்கின்ற காட்சிகளோடு ஒரு தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே புகுத்துவதற்காக அழுத்தம் கொடுக்கின்ற வேளையிலே இந்த காட்சிகள் மறுத்துரைத்தார்கள். எதிர்த்தார்கள்.

ஆகவே இவர்களுடன் தொடர்ந்து பயணிப்பது தங்களுடைய நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்கோ, அல்லது தென்னிலங்கையில் இருக்கின்றவர்களை சந்தோசப்படுத்துவது தமிழரசுக் கட்சிக்கு சிரமமாக இருந்தது.

தென் இலங்கையில் இருப்பவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப அதன் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலிலே, எல்லோரும் சேர்ந்து தண்ணீர் ஊற்றி வளர்த்த வீட்ட சின்னத்தை திருடிக் கொண்டு, நாங்கள் தனித்து தேர்தலில் களம் இறங்கப் போகின்றோம் எனக் கூறிக்கொண்டு பிரிந்து சென்றார்கள்.

ஆனாலும் நாங்கள் தமது மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த ஒற்றுமையை சீர்குலைக்க கூடாது என்ற வகையிலே அனைத்து தமிழ் தரப்புகளையும் பொது அமைப்புகளையும் ஒன்றிணைத்து ஜனநாயக தமிழ் தேசிய என்று வரையறுக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட, சீராக ஒழுங்கமைப்பப்பட்ட ஒரு கட்டமைப்பின் கீழ் பயணிக்க ஆரம்பித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இவ்வார ராசிபலன்

## 01-11-2024 வெள்ளி தொடக்கம் 07-11-2024 வியாழன் வரையும்

**மேஷம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும். இனிய தகவல் வந்து சேரும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K

**ரிஷபம்:** வம்புதும்புகள் ஒழியும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K

**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L

**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q

**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M

**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழிலில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W

(தொடர்ச்சி 22 பக்கம்)

கனடிய செய்திகள் Canadian News

## Canada's Global Tamil Cultural Organization hosted Symphony of Dance event in Brampton

# உலகத் தமிழ் கலாச்சாரச் சங்கம் பிரம்ரன் மாநகரில் நடத்திய Symphony of Dance நிகழ்வு





ரொறன்ரோவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் உலகத் தமிழ் கலாச்சாரச் சங்கம் கடந்த 26ம் திகதி சனிக்கிழமை பிரம்ரன் மாநகரில் உள்ள லெஸ்ஸ்ரர் பி. பியர்சன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்திய மேற்படி Symphony of Dance நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. மேற்படி நிகழ்விற்கு பிரம்ரன் மாநகரின் மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பின்னர் பிரம்பரன் மாநகர சபையின் சார்பில் பாராட்டுப்












பத்திரங்களை வழங்கி கௌரவித்தார்.

உலகத் தமிழ் கலாச்சாரச் சங்கத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினர்களான பரராஜசிங்கம் செல்வநாயகம் அவர்கள் நிரோதினி பரராஜசிங்கம் அவர்கள் உட்பட பலர் மேற்படி நிகழ்வை வெற்றிகரமாக நடத்த திட்டமிட்டு அதில் வெற்றி கண்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

அன்றைய விழாவில் யுபி-50 என்னும் இசைக்குழுவின் வாத்திய இசையில் பல நடனங்கள் அங்கு மேடையேறின.

இனிதான பல பாடல்களையும் பாடக பாடகிகள் சபையோருக்கான பாடி மகிழ்வித்தார்கள்.

பல்லின கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் நடைபெற்ற இந்த விழாவின் நடனங்கள் அனைவரையும் கவர்ந்தன.



# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A





**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியா-பாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை அதிர்'ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1491 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 1, 2024

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் புதிய தலைவராக கணக்காளரும் சமூகச் செயற்பாட்டாளருமான அரி. அரிகரன் அவர்கள் தெரிவானார்



கனடாவில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் பேசும் வர்த்தகர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு செயற்பட்டு வரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தினை நிர்வகிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பெற்று பின்னர் அந்த இயக்குனர் சபை இயங்கத் தொடங்கும்.

அந்த வகையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் புதிய ஆண்டிற்கான இயக்குனர் சபையின் தலைவராக கணக்காளரும் சமூகச் செயற்பாட்டாளருமான அரி. அரிகரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மேற்படி இயக்குனர் சபையைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மூலம் புதிய இயக்குனர் சபையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அதில் முன்னர் இயக்குனர் சபையில் பணியாற்றியவர்களும் புதிய முகங்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

புதிய இயக்குனர் சபைக்கும் அதன் தலைவரான கணக்காளரும் சமூகச் செயற்பாட்டாளருமான அரி. அரிகரன் அவர்களுக்கும் கனடா உதயன் பத்திரிகை நிறுவனமும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.



# தமது புதல்வரின் மிருதங்க அரங்கேற்ற மேடையில் ஸ்காபுறோ தமிழச் சமூக மையக் கட்டட நிதிக்காக 25 ஆயிரம் டாலர்களை வழங்கிய சட்டத்தரணி தேவதாஸ் — வாசுகி தம்பதி




கடந்த 26ம் திகதி சனிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்தள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் மிருதங்க ஞானவாருதி வாசுதேவன் ராஜலிங்கம் அவர்களது மாண-வரும் சட்டத்தரணிகள் தேவதாஸ்-வாசுகி தேவதாஸ் தம்பதியின் புதல்வருமான "இசைச் செல்வன்" தனுஜன் தேவதாஸ் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த சபையாக விளங்கிய அந்த சபையினருக்கு முன்பாக தமது புதல்வரின் மிருதங்க அரங்கேற்ற மேடையில் ஸ்காபு-றோ தமிழச் சமூக மையக் கட்டட நிதிக்காக 25 ஆயிரம் டாலர்களை தனுஜன் தேவதாஸ் அவர்களது பெற்றோர் அன்பளிப்பாக வழங்கினர்.

சபையோர் கரகோசம் செய்து சட்டத்தரணிகள் தேவதாஸ்- வாசுகி தேவதாஸ் தம்பதினரைப் பாராட்டினர்.

இங்கே காணப்படும் படத்தில் ஸ்காபுறோ தமி-ழச் சமூக மையக் கட்டட நிதி சேகரிப்பிற்காக விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் முக்கிய நிர்வாகிகளான சாந்தா பஞ்சலிங்கம் மற்றும் சட்டத்தரணி குபேஸ் நவரட்ணம் ஆகியோர் மேற்படி நிதி அன்பளிப்பினைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

# தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் கால வாக்குறுதிகளும் சறுக்க தொடங்கி விட்டன என்கின்றார் எம். ஏ. சுமந்திரன்



மாற்றம் என கூறி ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் கால வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக சறுக்க தொடங்கி விட்டது.

என யாழ் . தேர்தல் மாவட்டத்தில் தமிழரசு கட்சி சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் 31ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மாற்றத்திற்கான தேர்தல் என சொல்லப்படுகிறது மாற்றத்தின் ஆரம்பம் என ஜனாதிபதி தேர்தலை சொல்கின்றனர். ஒரு வகையில் அது சரி தான். காலம் காலமாக இரண்டு கட்சிகள் தான் மாறி மாறி ஆட்சி செய்த காலத்தில் இருந்து, தற்போது பாரிய மாற்றமாக மூன்றாவது தரப்பு ஆட்சியை பிடித்துள்ளது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# கனடாவின் மிகப்பெரிய ஊடக நிறுவனமான "கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின்" தலைவர் தோமஸ் சாரஸ் அவர்களைச் சந்தித்த உரையாடிய ஈழத்துக் கவிஞர் "ஆரணி"

**Former Government Agent, Writer and Poet Mr. Ambalavanar Sivabalasundaran from Jaffna, visited Toronto City Hall to meet Mr. Thomas Saras, who is the President of 'National Ethnic Press & Media Council of Canada.**

தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள முன்னாள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும் முன்னாள் இலங்கை உதவித் தேர்தல் ஆணையாளரும் கவிஞரும் எழுத்தாளருமான "ஆரணி" என்னும் புனைபெயர் கொண்ட அம்பலவாணர் சண்முகநாதன் அவர்கள் நேற்று புதன்கிழமை லோகேந்திரலிங்கம் அவர்களோடு ரொறன்ரோ நகர சபை பிரதான அலுவலகத் தொகுதிக்குச் சென்றிருந்தார்.

அங்கு அவர் கனடாவின் மிகப்பெரிய ஊடக நிறுவன-மான "கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின்" தலைவரான தோமஸ் சாரஸ் அவர்களைச் சந்தித்தார்.

அவர்களது உரையாடலின் போது தோமஸ் சாரஸ் அவர்கள் இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் குடிசார் நிலமைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

----செய்தியும் படமும்:- சங்கர் சிவநாதன்



# Canada's Global Tamil Cultural Organization hosted Symphony of Dance event in Brampton

# உலகத் தமிழ் கலாச்சாரச் சங்கம் பிரம்ரன் மாநகரில் நடத்திய Symphony of Dance நிகழ்வு



ரொறன்ரோவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் உலகத் தமிழ் கலாச்சாரச் சங்கம் கடந்த 26ம் திகதி சனிக்கிழமை பிரம்ரன் மாநகரில் உள்ள லெல்ஸ்ரர் பி. பியர்சன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்திய மேற்படி ளுலஅிாழலெ ழக னுயஉெந நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. மேற்படி நிகழ்விற்கு பிரம்ரன் மாநகரின் மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பின்னர் பிரம்ரன் மாநகர சபையின் சார்பில் பாராட்டுப் பத்திரங்களை வழங்கி கௌரவித்தார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)